Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்

இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.] (சி/2434)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 19 (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:338

# புலிகளை பேச்சுக்கு அழைத்துவர சகல முயற்சிகளும் எடுக்கப்படும்!

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு



[கொழும்பு]

**தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு வரச்செய்வதற்கு சாத்தியமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.**

**காலி சமகல மைதானத்தில் நேற்று இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –**

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு நாடடில் நிலையான சமாதானத்தை நிலைநாட்டும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

சகல அரசியற் கட்சிகளும், குழுக்களும் இந்த விடயத்தில் அக்கறை காண்பித்துவர வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நம்பிக்கை ஆகும்.

அரசியற் கட்சிகளினதும் குழுக்களினதும் தலைவர்கள் இனப் பிரச்சினைக்குக் தீர்வு காண்பது தொடர்பாக ஆராய்வதற்கு அடுத்த வாரம் அழைக்கப்படவிருக்கிறார்கள்.

நாட்டையும் மக்களையும் பாதுகாப்பது தலையாய கடமையாகும். இந்தக் கடமை ஒருபோதும், அலட்சியப்படுத்தப்படமாட்டாது.

நாட்டிலுள்ள சகல மக்களும் நீதியானதென்று கருதும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தீர்வு ஒன்றைக் காண்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

எதிர்வரும் மாதங்களில் பாரிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சருடன் மிலிந்த மொறகொட முக்கிய பேச்சு!

(புதுடெல்கி)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொட இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் உள்ளிட்ட இந்தியத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தியிருப்பதாக புதுடெல்கித் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை மிலிந்த மொறகொட, இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்கு புதுடெல்கி சென்றிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பயணத்துக்கு ஹெலி வழங்க மறுப்பு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இரா ... தியை வழங்க மறுத்துவிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## சமாதான முயற்சிகளுக்கான தீர்மானத்தை ஜனாதிபதி சந்திரிகாவிடமே விட்டுவிடுவோம்!

### சுதந்திரக் கட்சி விழாவில் அனுரா



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளு

காலியில் நேற்று இடம் பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டுபேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் உரையாற்றிய அமைச்சர் அனுர பண்டாரநாயக்க

இனப்பிரச்சினை தொடர்பாக ... வைத்துள்ளேன். அது தொடர்பாக வேறு சிலரும் கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

நாம் அனைவரும் இன்றுமுதல் எமது வாய்களை மூடிக்கொண்டு இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மட்டும் கருத்துக்களைக் கூற இடமளிப்போம் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருகருத்துக்களைக் கூறினால் அரசாங்கத்தினுள்ளே பிரச்சினை இருப்பதாக விடுதலைப்

# புலிகளின் பயணத்துக்கு ஹெலி வழங்க மறுப்பு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி கேணல் ரமேஷ் தலைமையிலான புலிகளின் தளபதிகள் மற்றும் அரசியற்துறைப் பிரமுகர்கள் அடங்கிய குழுவினர் மட்டக்களப்புக்குத் திரும்புவதற்கு அரசாங்கம் ஹெலிகொப்டர் வசதியை வழங்க மறுத்துவிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கிழக்குப் பாதுகாப்பு நிலைமை குறித்து, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ள இராணுவத்துடனான சந்திப்புத் தொடர்பாகவும் தலைமைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக ஒரே குரலில் பேசாததால் அவர்களுக்கு தவறான சமிக்ஞைகள் போய்ச் சேருகின்றன என அமைச்சர் அனுர பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டுபேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் உரையாற்றிய அமைச்சர் அனுர பண்டாரநாயக்க

இனப்பிரச்சினை தொடர்பாக நானும் சில கருத்துக்களை முன் வேறு சிலரும் கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

நாம் அனைவரும் இன்றுமுதல் எமது வாய்களை மூடிக்கொண்டு இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி மட்டும் கருத்துக்களைக் கூற இடமளிப்போம் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருகருத்துக்களைக் கூறினால் அரசாங்கத்தினுள்ளே பிரச்சினை இருப்பதாக விடுதலைப் புலிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கும்!

## மன்மோகன்சிங் மீண்டும் தெரிவிப்பு



(புதுடெல்கி)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தனது பூரண ஆதரவை வழங்குமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

நேற்று புதுடெல்கியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியா தனது பூரண ஆதரவை வழங்கும். ஆனால், இலங்கை இரண்டாகப் பிளவுபடுவதனை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

எமது அயல்நாடான இலங்கை பாரிய பிரச்சினை ஒன்றுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கையில், அதற்குத் தேவையான எவ்வாறான உதவிகளையும் நாம் செய்வோம்.

நாங்கள் இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றில் மிகக் கவனமாக இருக்கும் அதேவேளை, சிறுபான்மையினராகிய தமிழர் மற்றும் பிற இனத்தவர்களுக்கும், சகல உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என பதே எமது வேண்டுகோள் எனவும் அவர் தெரிவித்தார்.

# இருபாலையில் கோர விபத்து வயோதிபர் தலைசிதறிப் பலி!

(யாழ்ப்பாணம்)



திருமணச் சடங்கில் பங்கு கொண்டவர்களை ஏற்றிச் சென்ற மினிபஸ் மோதியதில், சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலே பலியானார்.

நேற்று மாலை 5 மணியளவில் இருபாலைச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற இந்தக் கோர விபத்தில் வி.எச்.வீதி இருபாலையைச் சேர்ந்த 73 வயதான மாணிக்கம் சின்னப்பா என்பவரே பலியானவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

பருத்தித்துறை வீதி ஊடாக திருமணச் சடங்கில் கலந்து கொண்டவர்களை ஏற்றிச்சென்ற மினிபஸ், முன்னே சென்ற காரை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே சைக்கிளில் வந்து கொண்டிருந்த வயோதிபருடன் மோதியது.

இதனால் நிலத்தில் வீழ்ந்த வயோதிபரது (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# வலயமட்ட ஆங்கில தின போட்டி முடிவுகள் விபரம்!

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட ஆங்கிலத்தினப் போட்டி முடிவுகள் அண்மையில் யாழ்.வலயக் கல்விப்பணிமனையால் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளிவந்ததன் தொடர்ச்சி வருமாறு :

### தரம் - 10

முதலாம் இடம் - ஸ்.சோபிதா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - சா.ஆரணி (திருக்குடும்ப கன்னியர் மடம்).

மூன்றாம் இடம் - தி.கௌசிகன் (யாழ்.இந்துக்கல்லூரி).

### தரம் - 11

முதலாம் இடம் - ப.சி.ஜனார்த்தனன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - பெ.பேட்சி ரசீல் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - தே.கிருசினி (கொக்குவில் இந்துக்கல்லூரி), ப. கனிமதுரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

## பேச்சு

### தரம் - 12

முதலாம் இடம் - டெ.செ.பார்னெஸ் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - ம.சகிதா சௌத்திரி (திருக்குடும்ப கன்னியர் மடம்).

மூன்றாம் இடம் - ஜெ.சகிதா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### தரம் - 13

முதலாம் இடம் - பெ.ஜீவன் பெனடிற் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - தி.மேரி சிந்துஜா (திருக்குடும்ப கன்னியர் மடம்).

மூன்றாம் இடம் - வி.அபர்ணா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

### தரம் - 12

முதலாம் இடம் - தி.சாளினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - ந.விவேக் (யாழ்.இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - த.கஸ்தூரி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

### தரம் - 12

முதலாம் இடம் - க.தர்சனன் (யாழ்.இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - சோ.லக்ஸிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - டெ.அரவிந்தராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி).

## பார்த்து எழுதுதல்

### தரம் - 03

முதலாம் இடம் - மு.பவித்திரா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை).

இரண்டாம் இடம் - சி.உமையாள் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - சோ.சோமசுந்தரம் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

### தரம் - 04

முதலாம் இடம் - பெ.சகாயநாதன் (சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - மோ.சோபிதன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

மூன்றாம் இடம் - றெ.அலெக்ஸன் (யாழ்.மத்திய கல்லூரி).

### தரம் - 05

முதலாம் இடம் - ப.மாதுமை (சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - ந.கௌசனா சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - கு.பிரியங்கா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை).

### தரம் - 06

முதலாம் இடம் - தி.தாரணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - சி.சுமிதா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - ஜெ.திவ்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

### தரம் - 07

முதலாம் இடம் - த.கீர்த்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - வே.அஜலக்சன் (யாழ்.இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - தே.தீபாசாளினி (ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்).

### தரம் - 08

முதலாம் இடம் - சி.வைஷ்ணவி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - ம்.லக்சனா (கொழும்புத்துறை இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - த.ஜெனோலினா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### தரம் - 09

முதலாம் இடம் - பா.செரின் பொஸ்ரினா (திருக்குடும்ப கன்னியர் மடம்).

இரண்டாம் இடம் - தே.பிரசாந்தி (கரந்தன் இராமுபிள்ளை வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ப.சிவரூபினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

### தரம் - 10

முதலாம் இடம் - அ.வருஜிதா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - செ.சுரேசனா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - மு.தர்சிகா (ஆவரங்கால் நடராசா இராமுபிள்ளை வித்தியாலம்).

### தரம் - 11

முதலாம் இடம் - சி.காருண்யா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - சி.துஷாந்தி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - சி.சிவதர்ஷினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

(தொடரும்)

## சிறு விளம்பரம்

### பனையின் பயன்களை ஊக்குவிப்போம்

இரண்டாயிரம் பனம் விதை சேகரித்தல் போட்டி - 2004 - விபரங்களுக்கு எழுத்து மூலம் தொடர்பு கொள்க. விண்ணப்ப முடிவு திகதி 30.09.2004. சிவதர்சினி பனம் பொருள உற்பத்தி தனியார் நிறுவகம், திரு. திருமதி.வே.கெ.தபாலன், நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (919)

---

ரோஸ், ரசம், நன்னாரிரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

## திரையரங்கில் இன்று

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம் (சி-2725)



திறைஞ்சனாஸ் சங்கானை

சேரன், சிநேகா நடித்த

ஆட்டோகிராப்

காட்சி நேரம்: 11.00,2.45,6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Strike Force (சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

கமல், சினேகா, பிரபு நடித்த




07.09.04 முதல் சுள்ளான்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்துக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன சுற்றாடலில் ஓர் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர், மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, அறை எண் - 30, யாழ். போதனா வைத்தியசாலை, தொ.பே. இல : 2225657 (925)

## நஷனல் பாதுகாப்புத் திட்டம்

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. வயது 22 இற்கு மேல் திடகாத்திரமான உடல் நிலை உடையவர்கள், முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த வேதனம் முன்னுரிமையும் வழங்கப்படும்.

181/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(924)

## அற்றோனித் தத்துவப் பத்திரம் மீளப்பெறுதல்

இத்தால் சகலருமறிக. இல. 10 நாவலடி ஒழுங்கை திருநெல்வேலி வடக்கு திருநெல்வேலி. தற்போது கனடாவில் வதியும் இரத்தினசிங்கம் சேனாதிராஜாவும் பெண் கிரிஜாவும் ஆகிய நாங்கள் கனடாவில் இருந்து 1.06.2003 இல் கனடா பிரசித்த நொத்தாரிஸ் இமானுவேல் பாஸ்தசார் முன்னிலையில் இல.10 நாவலடி ஒழுங்கை திருநெல்வேலி வடக்கில் வசிக்கும் குணரத்தினம் ஸ்ரீதரனுக்கு எமக்கு சொந்தமும் நிந்தமுமான பிரசித்த நொத்தாரிஸ் அ.சண்முகநாதன் அவர்களால் 14.11.1981 இல் முடிந்த 591 ஆம் இலக்க உறுதியின் ஆதன இடாப்பில் சொல்லிய ஆதனத்தை பார்வையிட, முகாமை செய்ய வழங்கிய அற்றோனித் தத்துவப் பத்திரத்தை 3.08.2004 இல் இருந்து இத்தால் இரத்துச் செய்தும், வெற்றும் வெறுதுமாக்கியும் விடுகிறேன் என இத்தால் வெளிப்படுத்துவதுடன் மேற் குறித்த ஆதனம் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் குறித்த ஸ்ரீதரன் எடுக்க தகுதியும் அருகதையும் அற்றவர் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ஆர்.வசந்தசேனன் (ஜே.பி.யு.எம்.)
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்

(966)

# யாழ்.பல்கலை புதிய கலைப்பீடாதிபதியாக பேராசிரியர் சிவச்சந்திரன் தெரிவானார்!

யாழ்பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை துணைவேந்தர் தலைமையில் இடம்பெற்ற கலைப்பீடாதிபதித் தேர்தலில் புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் இ.சிவச்சந்திரன் பெரும்பான்மை வாக்குகள் பெற்று புதிய கலைப்பீடாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் 1972 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராகத் தன்பணியை ஆரம்பித்தார்.

1975 முதல் 1978 வரை களனிப் பல்கலைக்கழகத்திலும், 1979 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார். யாழ்.பல்கலைக் கழகத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளராகப் பணியாற்றிய இவர் சமூகத்தையும் பல்கலைக்கழகத்தையும் இணைக்கும் செயற்பாட்டில் பணியாற்றியவர்.

# மாபெரும் கலைவிழா

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றமும், சங்கானை மாவடி இந்து மகளிர் மன்றமும் இணைந்து நடத்தும் ஐந்தாம் வருட மாபெரும் கலைவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு மாவடி இந்து இளைஞர் மன்றத் தலைவர் ச.கமலகாந்த் தலைமையில் - மாவடி ஞானவைரவர் ஆலய முன்றலின் திவாஜினி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக இந்துக் காலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சி.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக சங்கானை சிவப்பிரசகாச வித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த விழாவில் . கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (47,100)

# நமது ஈழநாடு

## இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிக்கான விதிகள்

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 X 4 அங்குலம் ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரவாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

நிபந்தனைகள்

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டாங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தாபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

குறிப்பு:- இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்?

## அறிவிக்குமாறு கோருகிறது சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் பதவிக் காலம் முடிவடைவதனாலும், அவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமுடியாது என்பதனாலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும் எனக் காலி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சட் டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

காலி மாவட்ட சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் சட்டத்தரணிகள் சங் கம் - கடந்த புதன்கிழமையன்று நடத்திய பொதுக் குழுக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தரணிகள் சங்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள் கைகளைப் பாதுகாப்பதற்காகவே அமைக்கப்பட்டது. அதன் தலை வராக ஜனாதிபதி சட்டத்தரணி சரத் பண்டார செயலாளராக ஜுட் லலி ஆகியோரதுதலைமையில் இந்தப் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டி ருந்தது.

இந்தப் பொதுக் குழுக்கூட்டத் தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, வேட்பாளரது பெயர் குறிப்பிடப்படுவதோடு, இதற்கு மேலதிகமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் படி, நாட்டை உரிய விதமாக வழி நடத்திச் செல்லப்படும் பொறுப்பு அரசுக்கு இருப்பதாக வலியுறுத் தியும் பிரேரணைகள் அனுமதிக்கப் பட்டுள்ளன.

இந்தத் தீர்மானங்கள் தொடர் பாகக் கருத்துக்கூறிய சட்டத் தரணி விஜேசேகர -

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ் நிலைகளைச் சரிப்படுத்தும் பாரதூரமான பொறுப்பு அரசுக்கு இருப்பதாகக் கூறினார்.

நேற்று முன்தினம் காலியில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது நிறைவு விழா வின் போது சமர்ப்பிப்பதற்காகவே காலி மாவட்ட சட்டத்தரணிகள் சங் கத்தினால் இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருந்தது. (தே)

# ஜேர்மன் நாட்டுக்கு உல்லாசப் பயணத்துக்கான விசாவுக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

ஜேர்மன் நாட்டுக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொள்வதற்கான விசாவுக்கு விண்ணப்பிக்க முடியும் எனக் கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவராலயம் அறிவித்துள்ளது.

இந்தக் குறுங்கால விசாவுக்கு விண்ணப்பிப்போர் ஆங்கிலம் அல்லது ஜேர்மன் மொழியில் சரளமாகப் பேசத்தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்.

அத்துடன், இந்த விசாவைப் பெறுவதற்கான ஒழுங்கமைப்புக்களைத் தொலைபேசியூடாகவே மேற்கொள்ளமுடியும்.

இந்த விசாவைப் பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான திகதியை 0112559040 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ள லாம்.

திங்கள் முதல் வெள்ளிவரை தினமும் காலை 9 மணிமுதல் 12 மணிவரையே விசாவைப் பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைத் திகதியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

தொலைபேசிமூலம் நேர்முகப் பரீட்சைக்கான திகதியைப் பெற் றுக்கொண்ட பின்னர், ஜேர்மன் தூதுவராலயத்தால் வழங்கப்படும் திகதியில் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுமெனவும் ஜேர்மன் நாட்டுத் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

# பதினொரு நாடுகளுக்கு தூதுவர்கள் நியமனம்!

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள பதி னொரு இலங்கைத் தூதுவரால யங்களுக்குத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை நியமிப் பதற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்க கடந்த வியாழக்கிழமை அனு மதி வழங்கினார்.

இந்தத் தூதுவராலயங்களுக்கு வெளிநாட்டு அமைச்சில் பணி புரிந்த அனுபவம் வாய்ந்தவர் களையே நியமிக்க வேண்டுமென அண்மையில் வெளியுறவு அமைச் சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரி வித்திருந்தார். இதன் அடிப்படை யிலேயே இவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுபவம் வாய்ந் தவர்கள் கடந்த இரண்டு வருடங் களில் நாற்பது வீதமானவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால், தற்போதைய இவர்களின் நியமனத் தின்படி இது அறுபது வீதமாக அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதன்படி - ஜேர்மனியின் இலங் கைத் தூதுவராக எம்.ஜே.பலிப் பானே, சுவீடனுக்கான இலங்கைத் தூதுவராக என்.சிக்கந்தர், கனடா வுக்கான உயர்ஸ்தானிகராக பி.எ. பி.கூனிதிலக, ஜப்பானுக்கான இலங் கைத் தூதுவராக றஞ்சித் உயங் கொட, நெதர்லாந்துக்கான இலங் கைத் தூதுவராக பமீலா ஜே டீன், நியூயோர்க்கிலுள்ள இலங்கைக் கான ஐ.நா.சபையின் நிரந்தரப் பிரதிநிதியாக பிரசாத் காரியவா சம், சவுதிக்கான இலங்கைத் தூது வராக எ.எம்.ஜே. சதீக், ஒஸ்ரி யாவுக்கான இலங்கைத் தூதுவ ராக அருணி விஜயவர்த்தன, பிரான்ஸுக்கான இலங்கைத் தூது வராக சி.வாடூஸ் வரா, பிலிப்பைன் ஸுக்கான இலங்கைத் தூதுவராக டபிள்யு. எம். செனிவிரட்ண, ஓமா னுக்கான இலங்கைத் தூதுவராக எம்.ம.்.றூப் ஆகியோரும்,

போலந்துக்கான தூதுவராக முன்னாள் வெளியுறவு அமைச்சு அதிகாரியான என்.நவரட்ணராஜா, ரஷ்யாவுக்கான தூதுவராக முன் னாள் ஊழியர் சம்மேளனத் தலை வர் மற்றும் புறூக்பொன்ட், தேயிலை கம்பனியின் நிர்வாக இயக்குநருமான நெவில் ரணசூரிய ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ள னர்.

# தமிழ் இளைஞரை நாடுகடத்த கனேடிய நீதிமன்றம் தடை!

கனடாவில் ஆயுத வன்முறை களுடன் தொடர்புடைய குழுவைச் சேர்ந்த தமிழ் இளைஞரை, நாடு கடத்தவேண்டாம் என கனேடிய நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சததியேஸ்வரன் கதிரவேலு என்ற இளைஞன் தாக்கல் செய்த மேன் முறையீட்டு மனு விசாரணையின் போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட் டது.

ஏ.கே.47 ரகத் துப்பாக்கி உட் பட வேறுபல ஆயுதங்களை இவர் வைத்திருந்தார் என்று குற்றம் சாட் டப்பட்டதோடு, கொலைச் சம்பவத் திலும் இவருக்குத் தொடர்பு இருக் கலாம் என்று சந்தேகம் வெளியி டப்பட்டது.

இதனை அடுத்து, இவரை நாடு கடத்த வேண்டும் எனக் கனேடிய பொலிஸார் அரசாங்கத்தைக் கோரி யிருந்தனர்.

இதற்கு எதிராகச் சந்தேகநபர் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான தீர்ப்பில் இவரை நாடுகடத்த வேண் டாம் என நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

## கேபிளைச் சேதப்படுத்திய கப்பலை

# விடுவிக்க ரெலிக்கொம் இணங்கியதற்கு தொலைத்தொடர்பு அமைச்சு கண்டனம்!

சிறிலங்கா ரெலிக்கொம் நிறு வனத்தின் சர்வதேச இணைப்புக் களுக்கான கேபிள்களை இலங் கைக் கடற்பரப்பில் சேதப்படுத் தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இந்தியக் கப்பலை - விடுப்பது குறித்து ரெலிக்கொம் நிறுவனத் துக்கும், தபால் தொலைத்தொடர் புகள் அமைச்சுக்கும் இடையே சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இந்தக் கப்பலை விடுவிப்பதற் கான காரணங்களைக் கூறி ரெலிக் கொம் நிறுவனத்துக்கு அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இந்த விபத்தின் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கு எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் குறித்து, இந்தக் கடி தத்தில் கேள்வியெழுப்பப்பட்டிருந்தது.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமையவே தாம் இந்தக் கப்பலை விடுவித்த தாக இலங்கைக் கடற்படையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி ரெலிக்கொம் நிறுவனம் இந்த கப் பல் நிறுவனத்துக்கு எதிராகத் தாக் கல் செய்திருந்த வழக்கை வாபஸ் பெற்றிருந்தது.

எனினும், எதிர்காலத்தில் மாற்று வகையிலான சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமையுடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் உயர திகாரி ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச இணைப்புக் கேபிள் சேதமடைந்தமைக்கு, தடுத்து வைக் கப்பட்டிருந்த கப்பலே காரணம் என்று இதுவரை ஊர்ஜிதம் செய் யப்படவில்லை.

இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட சிங்கப்பூர் கப்பலின் முழுமையான அறிக்கை வெளியிடு வதற்கு, மேலும் மூன்று மாதங்கள் செல்லும் என்று ரெலிக்கொம் நிறு வனம் தெரிவித்துள்ளது.

எனவே, தொடர்ந்தும் மூன்று மாதங்களுக்கு இந்தக் கப்பலை தடுத்து வைத்திருப்பதால் ஏற்படும் சிக்கலைத் தவிர்ப்பதற்காகவே கப்பலை விடுவித்ததாக ரெலிக்கொம் தெரிவித்தது. (01)

# கிழக்குக்கு தனியான நிர்வாகம்; அமைச்சர் அதாவுல்லா கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்துக்கென தனியான இடைக் கால நிர்வாக சபை அதிகாரம் வழங்கப்பட வேண்டுமெனக் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அமைச்சரும், அஸ்ரப் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினருமான அதாவுல்லா கோரியுள்ளார்.



அண்மையில் புல்மோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை தாம் எதிர்க்கவில்லை எனவும், இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட அமைச்சர் அதாவுல்லா, வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பைத் தான் எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பல்லின மக்கள் வாழும் கிழக்கில் தனியான இடைக்கால நிர்வாக சபை வழங்கப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியதாகவும் தெரியவருகின்றது.

# தொழிலாளர் காங்கிரஸ் முடிவு; ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கத்துக்கு நிபந்தனையற்ற விதத்தில் வெளி யிலிருந்து ஆதரவு வழங்கத் தயார் என்ற இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸின் அறிவிப்புக் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா அதிருப்தி தெரி வித்துள்ளதாக ஜனாதிபதிக்கு நெருக்கமான வட் டாரங்களிலிருந்து தெரியவருகிறது.



வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டி ருந்த ஜனாதிபதி - நேற்றுமுன்தினம் நண்பக லளவில் கொழும்பு திரும்பியதும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இத்தகைய உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து இது குறித்துப் பேசியபோது இந்த உடன்பாடு குறித்து அவர் தமது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தற்போதைய அரசியலமைப்பை மாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டு வரும் ஜனாதிபதி சந்திரிகா- தமது இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு தொழிலாளர் காங்கிரஸ் உடன்படாத நிலையில், அவர்களுடைய ஆதரவை அர சாங்கத்துக்குப் பெறுவதால் எந்தவித பயனும் இல்லை என்று கருதுவதாக வும் தெரிகிறது.

அரசியலமைப்பை மாற்றுவதற்கு தாம் ஆதரவு வழங்கப் போவ தில்லை என்று ஆரம்பத்திலிருந்தே தெரிவித்து வந்த இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ், தற்போது நிபந்தனையேதுமற்ற நிலையிலேயே அர சாங்கத்துக்கு ஆதரவு வழங்கப்போவதாகத் தெரிவித்துள்ள நிலையில், ஜனாதிபதியின் நோக்கத்துக்கு இது உதவப்போவதில்லை என்று அவர் கருதுவதாகவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.(01)

# அரசியலமைப்பு யாப்பைத் திருத்த நான்கு அமைச்சர்கள் எதிர்ப்பாம்!

ஜனாதிபதி சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க, மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டி யிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில், அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கு அரசு மேற் கொள்ளும் முயற்சிக்கு, அமைச் சரவையிலுள்ள அமைச்சர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சர்கள் 4 பேரும் 2006 ஆம் ஆண்டு நடத்தப்படு வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது, பொதுஜன ஐக்கிய முன்ன ணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி, ஜனாதிபதி வேட்பாளர் நியமனத் தைப் பெறுவதற்கு முயறசி செய் கின்றனராம்.

இதனால், அரசாங்கத்துக்குள் ளேயே சிக்கல்கள் தோன்றியுள் ளதாகப் பொதுஜன ஐக்கிய முன் னணியின் சிரேஷ்ட அமைச்சர் ஒரு வர் தெரிவித்தார்.

இதுவரை ஜனாதிபதி சந் திரிகா அடுத்த ஜனாதிபதி வேட் பாளர் யார் எனப் பெயர் குறிப் பிடாமல் இருப்பது, மக்கள் கருத் துக்கணிப்பு வாக்கெடுப்பின் மூலம் அரசியலமைப்பைத் திருத்திய மைத்து, மீண்டும் தானே ஜனா திபதிப் பதவியை வகிக்கும் எதிர் பார்ப்பினாலேயே எனவும் கொழும் புத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், அரசியலமைப்புத் திருத் தத்துக்கு ஆதரவை வழங்காது தவர்த்து வருவதாகவும் அந்தத் தக வல்கள் மேலும் தெரிவித்தன. (தே)

# ஜே.வி.பியின் எதிர்ப்பை கவனத்தில் எடுக்காது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும்

## சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் கோரிக்கை

ஜே.வி.பியினரின் எதிர்ப்பைக் கவனத்தில் எடுக்காது இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி ஜனாதிபதியைக் கோருவதென, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் அமைச்சர்கள் தீர்மானித்திருப்பதாக அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை யோச னையை அடிப்படையாகக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம் பிப்பது தொடர்பாக எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கைக்கு வரும் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் உறுதியான கருத் தைத் தெரிவிக்குமாறும், அது பின் னர் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத் தப்படும் எனவும் அவர் கூறினார்.

இடைக்கால நிர்வாகசபை ஆலோ சனையை அடிப்படையாக வைத் துக்கொண்டு, சமாதானப் பேச்சுக் களை ஆரம்பிக்கவேண்டும் என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் பலரது கருத்தாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# நட்வெஸ்ட் தொடர் இரண்டாவது ஆட்டத்திலும் இந்திய அணியினர் படுதோல்வி அடைந்தனர்!



இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற நட்வெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி 70 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, இங்கிலாந்து அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இங்கிலாந்து வீரர்கள் ஆரம்பம் முதலே இந்தியப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை லாவகமாக அடித்து ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டிருந்தனர்.

ட்ரஸ் கொதிக் 27 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஆட்டமிழக்க அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் வோகன் 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த ஸ்ரரஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துசெல்ல பிளின்ரொப் களம் புகுந்தார்.

அதேநேரம் எதிர்முனையில் 48 ஓட்டங்கள் எடுத்திருந்த சொலங்கி ஆட்டமிழந்துசெல்ல கொலின்வூட் களமிறங்கினார்.

கொலின்வூட்டும் பிளின்ரொப்பும் இணைந்து ஆடி தமது அணிக்கு ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தனர்.

பிளின்ரொப் 93 பந்துகளில் 9 பவுண்டரி, 4 சிக்ஸர் அடங்கலாக 99 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். அடுத்து ஜோன்ஸ் களம் இறங்கி, ஆட்டநேர முடிவில் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலிருநதார்.

50 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட் இழப்புக்கு 307 ஓட்டங்களை இங்கிலாந்து அணி குவித்தது.

இந்தியப் பந்துவீச்சாளர்களின் மோசமான பந்துவீச்சினால் 36 உதிரி ஓட்டங்கள் இங்கிலாந்து அணிக்குக் கிடைத்தது.

பதான் 10 ஓவர்கள் பந்துவீசி 58 ஓட்டங்களையும், பாலாஜி 8 ஓவர்கள் பந்துவீசி 77 ஓட்டங்களையும், அகார்கர் 6 ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களையும் ஷேவாக் 10 ஓவர்கள் பந்துவீசி 51 ஓட்டங்களையும் கொடுத்தனர்.

பெரும் ஓட்ட இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டத்தில் சோபிக்கவில்லை. இவர்கள் சொற்ப ஓட்டங்களுடன் பவலியன் திரும்பினர்.

கங்கூலி -07, ஷேவாக் - 00, லக்ஷ்மன் - 33, கைவ் - 51 ட்ராவிட் -01, யுவராஜ்சிங் - 24, கவாஸ்கர் - 13, அகர்கார் - 22, பதான் 07, பாலாஜி 18 ஓட்டங்களை எடுத்தனர். ஹர்பஜன்சிங் ஆட்டமிழக்காமல் 39 பந்துகளில் 1 சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 41 ஓட்டத்தை பெற்றிருந்தார்.



பிளின்ரொப்

இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் 27 உதிரி ஓட்டங்களைக் கொடுத்திருந்தபோதும் இந்திய அணி 46.3 ஓவர்களில் 237 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இதன்மூலம் இங்கிலாந்து நட்வெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. இறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.



# தீவுப்பகுதி போக்குவரத்தில்: இந்திய மீன்பிடிப் படகுகள்

இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நான்கு ட்ரோலர் படகுகள் - தீவுப்பகுதி போக்குவரத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் ஊர்காவற்துறை இறங்குதுறையில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனிடம் இந்த நான்கு படகுகளும் உத்தியோக பூர்வமாக ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் ஸ்ரீமோகனால் வழங்கப்பட்டன.

கடந்த காலங்களில், இந்திய மீனவர்கள் - இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தபோது, அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்த ட்ரோலர் படகுகள்- நீதிமன்றத்தால் இலங்கை மீன்பிடியியல் திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறு வழங்கப்பட்டிருந்த மீன்பிடிப்படகுகளில் நான்கு - தீவுப்பகுதிப் பொதுமக்களின் போக்குவரத்துக்கென, இலங்கை மீன்பிடியியல் திணைக்களத்தால் ஊர்காவற்துறைப் பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டு, பின் அவர் ஊடாக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அரச அதிபர் படகுகளை மக்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ட்ரோலர் கையளிப்பு நிகழ்வில் - யாழ்.மாவட்ட அரச அதிபருடன், யாழ்.செயலக உதவி அரச அதிபர் வீரபத்திரப்பிள்ளை நிக்கொட் அமைப்பின் பொறியியலாளர் நவரத்தினராஜா ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## வைத்தியசாலைக்கு மருந்துகள் கிடைக்கவில்லை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு இந்த ஆண்டுக்கான மூன்றாம் கந்தாய மருந்துகள் வந்து சேரவில்லை.

இதனால் நோயாளர் பலர் தனியார் மருந்துக்கடைகளில் அதிக விலை கொடுத்து மருந்துகள் வாங்க வேண்டியிருப்பதாகக் கூறுகின்றனர்.

குறிப்பாக நீரிழிவு நோயாளர் பயன்படுத்தும் ரஸ்ரினன், டயனில் போன்ற மருந்துகள் ஒரு கிழமைக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றன. (101)

# துறையூர் - சுருவில் வீதியை பயன்படுத்த முடியாதநிலை!

(ஊர்காவற்துறை)

வேலணைத்துறையிலிருந்து சுருவிலுக்குச் செல்லும் வீதி - போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், இந்த வீதியால் செல்லும் வாகனங்கள், வீதியை விட்டு விலகி தனியார் காணிகள் ஊடாக செல்கின்றன.

எனினும், தனியார் காணிகளின் உரிமையாளர்களாலும் இந்தப் பகுதியில் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடும் இளைஞர்களாலும் மரக் குற்றிகள் போடப்பட்டும், கிடங்குகள் வெட்டப்பட்டும் தடை ஏற்படுத்தப்படுகின்றது.

இதனால், இந்த வீதியைப் பயன்படுத்தும்போது வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதாக வாகன சாரதிகள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த வீதியூடாகவே யாழ்நகர் - ஊர்காவற்துறை இடையேயான 780 ஆம் இலக்க பஸ் சேவைகளும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தககது. (99)

# தீவகத்துக்கான மின் விநியோக பணிகள் ஆரம்பமாகியுள்ளன

தீவகத்தின் ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேசங்களுக்கு 24 மணிநேர மின் வழங்கலுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக காரைநகர் மற்றும் ஊர்காவற்துறையில் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு, மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இந்த வேலைகள் பூர்த்தி அடைந்ததும் - 24 மணிநேர மின் விநியோக வேலைகளை ஆரம்பிக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போது இந்தப் பிரதேசங்களுக்கு மின் பிறப்பாக்கிகள் மூலம் பகுதிநேர மின்சாரமே வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (99)

# மனனப் போட்டிக்கு விண்ணப்பித்தோருக்கு இலவச திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

திருக்குறள் மனனப் போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் நன்மை கருதி, அவர்களுக்கு திருக்குறள் புத்தகம் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

திருக்குறள் மனனப் போட்டி ஏற்பாட்டுக் குழுவினால் இந்தத் திருக்குறள் புத்தகம் இலவசமாக வழங்கும் நடைமுறை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் - பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்தை சமர்ப்பித்து, தமக்குரிய புத்தகங்களைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலயக் கல்வி அலுவலகத்தில் பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்தை சமர்ப்பித்து, உடனடியாக மாணவர்கள் திருக்குறள் புத்தகத்தைப் பெறுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

# கட்டாக்காலி நாய்களை அழிக்கும் ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு ஆவன செய்யுங்கள்

## மானிப்பாய் பிரதேசசபை கோரிக்கை

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குள் கட்டாக்காலி நாய்கள் பெருமளவில் பெருகி வருகிறது.

இதனை அழிப்பதற்குப் போதிய நஞ்சு மருந்து இல்லாத காரணத்தால், கட்டாக்காலி நாய்களை வண்டில் மூலம் பிடிக்க பிரதேசசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

மானிப்பாய் பிரதேசசபை யின் செயலாளர் பி.விக்டர் - கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு எமது ஊழியர்களுக்குக் கொடுப்பனவு வழங்கவேண்டியுள்ளது.

எனவே, அதற்கு ஆவன செய்யும்படி யாழ்.மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

மேலும், அந்தக் கடிதத்தில் தற்போது நாம் எமது சபை அலுவலகங்களைப் பயிற்றுவித்து, பல சிரமங்களுக்கு மத்தியில் கட்டாக்காலி நாய்களையும், விசர் நாய்களையும் அழித்து, விலங்குகள் மூலம் ஏற்படும் நோய் மனிதனுக்குப் பரவாது தடுத்து வருகிறோம்.

எமது சபை ஊழியர்கள் கட்டாககாலி நாய்களைப் பிடித்து அதனைக் கொல்வதுடன், புதைத்தும் வருகின்றனர்.

இதனை அலுவலக நேரத்தில் செய்துவருவது மட்டுமன்றி, கடமை நேரம் தவிர்ந்த நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே - தங்களின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் கடந்த காலங்களில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு ஈடுபட்ட ஊழியர்களுக்குக் கொடுப்பனவு வழங்க ஆலோசித்துள்ளோம்.

மேலும் - சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற கட்டாக்காலி நாய்கள் அழிப்பு விடயத்தில், ஒரு நாயைப் பிடித்து அதனைக் கொல்வதற்கு 100 ரூபாவுக்கு மேல் செலுத்தவேண்டும் என பிரதேச சபைகளின் செயலாளர்களும், பிரதிநிதிகளும் வலியுறுத்தியுள்ளமையை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

எனவே - இவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்குரிய அங்கீகாரத்தைத் தாங்கள் வழங்கி உதவும்படி உள்ளூராட்சி ஆணையாளரிடம் செயலாளர் கேட்டுள்ளார். (100)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தெய்வீக இசையரங்கு

(மானிப்பாய்)

நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவகாலத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் - நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 16 ஆம் நாள் நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வில் - நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும். நாதஸ்வர வித்துவான்களான - வி.கே.கானமூர்த்தி, வி.கே.பஞ்சமூர்த்தி, பி.ரவீந்திரன், வி.கே.கே.கிருஷ்ணதாசன், வி.கே.பி.குமரேஸ், என்.கோவர்த்தனன் ஆகியோரும்,

தவில் வித்துவான்களான - ரி.சுந்தரலிங்கம், பி.ரவீந்திரன், ஆர்.ஆனந்தகணேஸ், என.நந்தகுமார், பி.நர்மதன், வி.நீதிகாந்தன் ஆகியோராலும் இசையரங்கு நடத்தப்படவுள்ளது. (100)

## கட்டாக்காலிகளால் வைத்தியசாலை அசுத்தம்

வேலணை பொது மருத்துவமனைகளில், இரவுவேளைகளில் உளநுழையும் கட்டாக்காலி கால்நடைகளால் அசுத்தம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையைச் சுற்றி மதில் இல்லாமையே இதற்கு காரணம் எனவும், உடனடியாக சுற்று மதில் அமைக்கவேண்டியுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (99)

## மானிப்பாய் பிப்பிலி மயானம் துப்புரவு செய்ய ஏற்பாடு

(மானிப்பாய்)

மானிப்பாய் பிப்பிலி மயானத்தின் பரப்பளவை உள்ளடக்கிய பிரதேசம் நாளை மானிப்பாய் பிரதேசசபை ஊழியர்களின் விசேட ஏற்பாட்டின் பிரகாரம், சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளதாக பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார்.

இந்தப் பிப்பிலி மயானத்தை அண்டியுள்ள பகுதி, தற்சமயம் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதை அவதானித்த நலன் விரும்பிகள்- பிரதேசசபையின் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதையடுத்து, துப்பரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேசசபையின் வட்டாரங்கள் தெரிவித்தன. (100)

## மட்டக்களப்பு தாதியர்கள் குடாநாட்டுக்கு கல்விச்சுற்றுலா

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த 30 மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் ஒருவாரகாலம் இங்கு தங்கியிருந்து, யாழ்.மாவட்டத்தின் முக்கியமான பல இடங்களையும் பார்வையிட்டுச் செல்வார்கள்.

இந்தச் சுற்றுலாக் குழுவினர் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளமை இதுவே முதல் முறையாகும். இதில் 2 ஆண்கள் உட்பட ஏனையோர் பெண்களாவர்.

## புனித மரியன்னை ஆலய திருநாள்

நெடுந்தீவு கிழக்கு புனித மரியன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருநாள் திருப்பலி கடந்த மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை நற்கருணை எழுந்தேற்றமும், மறுநாள் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை நவநாள் திருப்பலியும், கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

திருநாள் திருப்பலிகளை நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு எஸ்.ஜெபநேசரத்தினம் அடிகளார் ஒப்புக்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று, 2004 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றி, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் பரிசில் வழங்கி கௌரவிப்பதற்கான நடவடிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் எடுத்துள்ளார். (29)

## நல்லை ஆதீன முதல்வரின் நற்சரிதம் நூல் வெளியீடு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தர் பரமாசார்ய சுவாமிகளின் 'வாழ்க்கைச் சரிதம்' நூல் இன்று நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள பீடா ரோஹண விழாவில் வெளியிடப்படவுள்ளது.

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் உருவாக்கத்தில் "நல்லை ஆதன முதல்வரின் நற்சரிதம்" நூலின் பிரதியை சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை பெற்றுக்கொள்வார்.

# முகவரிகளை சரியாகக் குறிப்பிடத் தவறுவதால் உரியகாலத்தில் கடிதங்களை சேர்க்கமுடிவதில்லை

## தெல்லிப்பளை தபாலதிகாரி தெரிவிப்பு

வலி. வடக்குப் பிரதேசத்தை தமது நிரந்தர முகவரியாகக் கொண்ட மக்கள் - தாம் தற்போது வசிக்கும் சரியான முகவரிகளைக் குறிப்பிடத் தவறுவதால், உரிய காலத்தில் தபால்களை சேர்ப்பிக்க முடியாதுள்ளதாக தெல்லிப்பளை தபாலக அதிகாரி தெரிவித்தார்.

குடியிருப்பாளர்கள் தாம் வசிக்கும் வீதியின் பெயர், குறிச்சியின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடாது, வீட்டின் பெயர் கிராமத்தின் பெயர் என்பவற்றுடன், நிறுத்திக் கொள்வதாகவும், சிலர் முழுப்பெயரைக் குறிப்பிடாது - சிறு பிள்ளைகளின் பெயரைக் கடிதத்தில் குறிப்பிடுவதால், அவர்களின் பெயர் கடித விநியோகஸ்தர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இதனால் பல கடிதங்கள் - குறிப்பாக வங்கிக் கடிதங்கள், நேர்முகப் பரீட்சைக் கடிதம், பரீட்சைக் கடிதம், பதிவுக்கடிதம், நியமனக் கடிதம் என்பனவற்றை உடனுக்குடன் விநியோகிக்க முடியாதுள்ளது.

இதனால் பலர் தமக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்களை இழக்க நேரிடுகிறது. வேறுசிலர் - நாள் பிந்தி, தாம் சென்று கடிதத்தை பெற்றுவிட்டு தமக்கு கடிதம் வர பிந்திவிட்டதாகவும், தபால் திணைக்களமே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமெனவும் விதண்டாவாதம் புரிகின்றனர்.

முகவரி மாற்றங்களுக்கான படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து கொடுத்தால், வீண் தாமதமின்றி உடனுக்குடன் தபால் அனுப்ப முடியுமெனவும், பலருக்கு இந்த நடைமுறை தெரிவதில்லை எனவும், எனவே இனி வருங்காலங்களில் தபால் சிரமங்களையும், தாமதங்களையும் தவிர்க்கும் படியும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.(101)

## முன்பள்ளி ஆசிரியர்களின் விபரம் திரட்டப்படுகிறது!

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 52 முன்பள்ளி ஆசிரியர்களினது விபரங்கள் பிரதேசசபையால் திரட்டப்பட்டு வருகிறது.

52 முன்பள்ளிகளும் தங்களது விபரங்களை ஆசிரியர், உதவி ஆசிரியர் ஆகியோர்களது விபரங்களையும் இந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார்.

இதுவரை படிவங்களைப்பெறாத ஆசிரியர்களும் உடனடியாகப் படிவங்களைப் பெற்று, முழுமையான விபரங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (100)



சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முகப்பு மண்டப திறப்பு விழாவில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் அருட்திரு எம்.றொசான், அருட்திரு தொ.யேசுதாசன் மற்றும் பங்குச்சபை செயலாளர் சூ.சிறில் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# விளையாட்டு அரங்கம்





றொனிக் வில்லியம்ஸ
உண்மை வீரம்

உலகிலுள்ள சிறிய தீவுகள் எல்லாம் நடைபெற்று முடிந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று முதன் முறையாகப் பெற்ற வேளை இந்தியாவால் எதைச் சாதிக்க முடிந்தது.

யுத்த சன்னதமாடும் ஈராக் கில் கூட அந்த நாட்டு உதைபந்தாட்ட வீரர்கள் அனைவரும் பிரமிக்கத்தக்க வகையில் அரையிறுதி வரை வந்து கௌரவமான தோல்வியையே சந்தித்தனர். கடந்த 56 ஆண்டுகளுக்குப் பின்னர் மல்யுத்தப் போட்டியில் வெனறதன் மூலம் எகிப்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது.

இதனைவிடப் பட்டி னியின் விளிம்பில் இருக்கும் பல ஆபிரிக்க நாடுகள் தமது நாட்டின் வறுமையை விடவும், வீரர்களை உற்சாகமாகப் போட்டிக்கு அனுப்பியவேளை, அந்த வீரர்களும் தமது நாட்டிற்குப் பதக்கங்களை பெற்றுக் கொடுத்ததையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

எனவே இந்தியா நூறு கோடி செலவழித்து, தனது நாட்டிலிருந்து 76 வீரர்களை அனுப்பி, ஒரேயொரு வெள்ளிப் பதக் கத்தை மட்டுமே பெற்று, பதக்கம் பெற்ற நாடுகளில் 66 ஆவது இடத்தையே பிடித்தது.

ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிப் பதக்கம் பெறுவதென்பது செயற்கைத்தனமான முறையில் எடுக்கப்படும் இந்திய சினிமாக்களில் கதாநாய கன் அல்லது நாயகி, வில்லன்கள் பலரை வீழ்த்தி, வெற்றி பெறும் ஒரு நிகழ்வல்ல. இது உணர்வுபூர்வமான வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வீரர்களின் அதி உச்சத்திறமை.

## பாவம் இந்திய இளைஞர்கள்



சின்ஹுவா
அக்னி



விடிவெள்ளி

தமிழில் ஒரு பழமொழி உண்டு. ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டு விட்டு அசையாமல் இருக்குமாம். ஆனால் கோழி ஒரு முட்டை இட்டு விட்டு ஊரெல்லாம் தெரிய வேண்டுமென்பதற்காக கொக்கரித்துக் கொண்டு திரியுமாம். என்பதே அது.

இந்தப் பழமொழி நடந்து முடிந்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இரண்டு நாடுகளுக்கு நன்றாகவே பொருந்தும். இதில் ஆமையை சீனாவிற்கும், கோழியை இந்தியாவிற்கும் ஒப்பிடலாம்.

இதில் சீனாவின் எழுச்சியென்பது எவரும் எதிர்பார்க்காத பிரமிப்பான விடயம்தான். மற்ற நாடுகளைப் போலல் லாமல் உலக சம்பியன்கள் மற்றும் தற்போதைய சம்பியன்களை அனுப்பாமல் தனது புதிய இளம் வீரர்களை நம்பி களமுனைக்கு சீனா அனுப்பியதுதான்.

ஆனால் உலகிலேயே சனத்தொகையில் இரண்டாவது நாடென்றும், இன்னும் சில காலங்களில் சீனாவின் சனத்தொகையையும் முறியடித்து உலகில் நம்பர் 1 என்ற இடத்தை வெற்றிகரமாகப் பிடிக்கவுள்ள இந்தியா, நடந்து முடிந்த ஒலிம்பிக்கில் சாதித்ததுதான் என்ன?

குறித்த சில வீரரின் பெயரை இந்திய அரசியல்வாதிகளிலிருந்து சாதாரண நபர்கள் வரைகூறி, இவர் தங்கம் வெல்வார், அவர் தங்கம் வெல்வார் என்று வெறும் வாய்ச்சவடால் விடுத்ததற்கு, துப்பாக்கிச் சூட்டுப் போட்டியில் ராஜ்வர்த்தன் ரத்தோர் மட்டும் இரண்டாவதாக வநது வெள்ளிப் பதக்கத்தை பெற்றதைவிட வேறொரு வீரரும் எதையுமே சாதிக்கவில்லை.

ஆனால் ஒலிம்பிக்கில் பங்குபற்றிய 3 வீரர்கள் இந்திய ஒலிம்பிக் சாதனையை நிலைநாட்டி, நாட்டிற்குப் பெரும் கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அதுதான் அவர்கள் ஊக்க மருந்து பாவித்தமையாகும். ஜனநாயகம் பற்றிப் பேசப்படும் இந்திய நாட்டில் ஊக்கமருந்தைப் பாவிக்க யார் தடைவிதிக்கப் போகிறார்கள் என நினைத்து அந்த மூன்று வீரர்களும் இந்தச் சாதனையை ஏற்படுத்தியிருக்கலாம்.

தொப்புளைக்காட்டுவதும், இடுப்பில் கிள்ளு வதும், குடும்பத்துடன் இருந்து பார்க்கவே முடி யாத அநாகரிகமான வாழ்க்கையில், கற்பனைக் கெட்டாத வகையில் அசிங்கமாக எடுக்கப்படும் சினிமாக்களும், அந்த சினிமாக்களுக்குள் எதிர்கால சந்ததியினரைய மூழ்கவிட்டால், அவர்கள் எங்கே உலக சாதனை படைக்கப் போகின்றார்கள்?

இதனைவிட இந்திய அரசியல்வாதிகளில் ஒரு சிலர் இந்துத்துவம் என்று கூற, மறுசிலர் தமது வங்கிகளில் பணத்தை நிரப்பிக்கொண்டிருக்க எங்கே இளைஞர், யுவதிகளை உலக சாதனை படைக்க இவர்கள் விடப்போகின்றார்கள்.

பாகிஸ்தான் என்ன செய்யும், அதனை விட நாம் ஏதாவது செய்ய வேண்டுமென எண்ணி, எண்ணியே காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதிலேயே இந்தியாவின் தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்களுக்கு நேரம் போதாமலிருக்க, வீரர்களை உலகசாதனை படைக்க விடவா இவர்களுக்கு நேரமிருக்கப் போகின்றது.

எவ்வாறாயினும் நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியில் வல்லரசான அமெரிக்காவையே அச்சுறுத்தி, இரண்டாவது இடத்தைப் பிடித்த சீனா மௌனப்புரட்சியொன்றை நடத்தி விட்டதை மறுக்காமல் ஏற்கத்தான் வேண்டும். ஏனெனில் அதுதான் நிதர்சனமும் கூட.

- யசோ.

## வானம் வசப்படும் இவர்களுக்கு



யெலினா
விண்மீன்

**2004** ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் மிக ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட இன்னொரு நிகழ்வு மகளிருக்கான கோலூன்றிப் பாய்தல் (POLE VAULT). ஏனெனில், யெலினா இஸின் பயேவா மற்றும் சுவெட்லானா பீபனோவா இருவருமே இத்துறையின் ஆக்கிரமிப்பாளர்கள். இருவருமே ஜிம்னாஸ்ரிக் வீராங்கனைகள். இருவரும் தமக்குள் எட்டு சாதனை உயரங்களை இவ் வருடத்தில் மட்டும் மாறி மாறித் தகர்த்துக் கொண்டவர்கள். இருவருமே ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்கள்.

உண்மையில் உலகசாதனை நேரமாகக் கணக்கிடப்பட்டிருந்தது 4.90 மீற்றர் உயரம் தாண்டியமை. இது இஸின்பயேவாவினால் சாதிக்கப்பட்டது. ஆனால், ஒலிம்பிக்கைப் பொறுத்து 4.85 மீற்றரே தங்கம் வென்ற இஸின்பயேவாவினால் தாண்டிய உயரமாக அமைந்தது. இரண்டாவதாக வந்த பீபனோவா 4.75 மீற்றர் தாண்டி, வெள்ளிப் பதக்கம் பெற, வெண்கலப் பதக்கத்தை 4.70 மீற்றர் தாண்டி, போலந்து நாட்டின் அன்னா றொகொஸ்கா தட்டிச் சென்றார். இது ஒருபுறம் இருக்க அதனைத் தொடர்ந்து இந்த இரு ரஷ்ய மங்கைகளும் யார் கூடிய உயரத்தைக் கடக்கக் கூடியவர்கள் என்ற போட்டி ஒன்று உருவாகியது. குறுக்குக் கோல் 4.80 மீற்றரில் வைக்கப்பட்டது. பீபனோவா முயற்சித்தார் முடியவில்லை. இசின்பயேவா களமிறங்கினார். மீண்டும் குறுக்குக் கோல் உயர்த்தப்பட்டது. இந்த உயரத்தை அனாயாசமாகத் தாண்டினார் இசின்பயேவா. அடுத்தது 4.90 மீற்றருக்குக் குறுக்குக் கோல் உயர்ந்தது. இதனைத் தாண்டினால் உலக சாதனையைச் சமப்படுத்தியவராவார். இசின்பயேவா இதனையும் தாண்டி அவர் 4.91 மீற்றரை அதே முனைப்புடன் தாண்டியபோது, அத்தனை ரசிகர்களும் அப்படியே உறைந்துபோனார்கள். அதேவேளை, இசின்பயேவாவின் முகத்தில் ஏற்பட்ட உணர்வுகள்? அதை வடிக்க வார்த்தைகள் இல்லை. இந்த இருபத்தியிரண்டே வயதான ரஷ்ய மங்கை இந்த வருடத்தில் கலந்துகொண்டு முதன்மைபெற்ற எட்டாவது சந்தர்ப்பம் இது. ஆனால், இந்த ரஷ்ய வீராங்கனைக்குப் போட்டியான இன்னொரு ரஷ்ய வீராங்கனை பீபனோவா சாமான்யப்பட்டவர் அல்ல. ஒலிம்பிக் போட்டிகள் இனி 2008ஆம் ஆண்டில்தான். ஆனால், 2005ஆம் ஆண்டில் எத்தனையோ சர்வதேச தடகளப் போட்டிகள் நடைபெறப் போகின்றன. இரண்டு ரஷ்ய மங்கைகளின் போட்டிகளும் தொடரத்தான் போகிறது.



சுவெட்லானா
வானமகள்

-மரியா.

## உயர்ந்த மனிதன்



ஹிக்கம்
இறைவனே தந்தான

**மொ**ரோக்கோ நாட்டின் ஹிக்கம் எல் குராஜ் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் மனங்கொள்ளத்தக்க சாதனை புரிந்தவர். 1500 மீற்றர், மற்றும் 5000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் இரட்டைத் தங்கம் வென்று, சாதனை படைத்தவர் அவர். அவரது பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது IOC யில் அவர் பெற்றுள்ள பதவி ஒன்று.

IOC யின் பல அமைப்புக்களில் ஒன்று - சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தடகள வீரர் ஆணையம். இந்த ஆணையத்துக்குத் தெரிவான நான்கு பேரில் இவரும் ஒருவர்.

இந்த நான்கு வெற்றிடங்களுக்கும் போட்டியிட்டவர்கள் மொத்தம் முப்பது பேர். இவர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்ற அங்கத்தவர்களின் ஏறத்தாழ 50% மான வாக்காளர்களான 5787 தடகள வீரர்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

ஹிக்கத்தைவிட்டால் மற்ற மூன்று பேரும் நமீபியாவின் குறுந்தூர ஓட்ட வீரர் பிரான்க் பிரெட்ரிக்ஸ்ற் செக் குடியரசின் ஈட்டி எறிதல் வீரர் ஜென் ஜெனலன்சி மற்றும் எகிப்து நாட்டின் நீச்சல் வீராங்கனை ரானியா எல்வானி ஆவார்கள். இவர்களது பதவிக்காலம் எட்டு ஆண்டுகளாகும்.

இந்தத் தடகள ஆணையத்தில் அங்கத்துவம் பெறப் போட்டியிடுவதற்கு ஒருசில தகுதிகள் வேண்டும்.

சிட்னி அல்லது ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டவராக இருக்க வேண்டும். தனது விளையாட்டுத்துறை வாழ்க்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஊக்க மருந்துப் பாவனையில் தொடர்புபடுத்தப்பட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கக்கூடாது.

இந்தப் பெருமை நிறைந்த சபையில் பத்தொன்பது அங்கத்தவர்கள் இடம் பெறுவார்கள். இதில் ஹிக்கம் ஒரு அங்கத்தவர். ஒரு விளையாட்டு வீரனாக அவர் பெற்ற பெருமையில் இந்தப் பதவிப் பெருமை கொஞ்சமும் குறைவில்லாதது.

- மக்டலீன்.

# உங்கள் மீது குற்றம் சாட்டுகிறோம்



இன்சமாம் பொறுமையின் சிகரம்

நெதர்லாந்தில் நடைபெற்று முடிவடைந்த முத்தரப்பு வீடியோ கொன் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் திறமை மற்றும் தார்மீக ரீதியில் பாகிஸ்தானுக்கே சேரவேண்டும் என்பது நடுநிலை விமர்சகர்களின் கருத்து. இதற்கு வலுவானதொரு ஆதாரமாகத் தெரிவது பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் ஆட்டமிழந்தார் என்று மத்தியஸ்த ஜாம்பவான் டேவிட் ஷெப்பட் விரலை உயர்த்தியது தான். அன்ரு சைமன்ட்ஸ் வீசிய பந்தை இன்சமாம் அடிக்க முயன்ற போது பந்து இன்சமாமைக் கடந்து விக்கெட் காப்பாளர் ஹெடின் இடம் சென்றது. பந்து துடுப்பில் ப்ட்டதாக ஷெப்பட் முடிவு செய்து ஆட்டமிழந்ததாக அறிவித்தார். ஆனால், ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அத்தனை பேருக்கும் முடிவு தவறானது என்று தெரிந்தது. REPLAY காட்டியபோது அதுவே உண்மை என்றும் உறுதியாயிற்று.

இந்த விடயத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பிரதம தெரிவாளர் வாசீம் பாரி மற்றும் கிரிக்கெட் வல்லுநர்கள் இது பற்றி மிகக் காட்டமாகக் கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.

தற்போது 63 வயதாகும் ஷெப்பட், இனி ஓய்வு பெறவேண்டும் என்பது பரவலான கருத்து. கிரிக்கெட் பத்தி எழுத்துநர் ஓமர் குரேஷி கருத்துக்கூறும்போது, ஷெப்பட் ஓய்வு பெறும் வயதையும் கடந்து விட்டார் என்பதோடு, சர்வதேச நடுவர்கள் எல்லோரும் கிரமமான, ஆனால் கடுமையான மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும் என்கிறார்.

ஷெப்பட் ஒரு பிழையல்ல, இரு பிழைகளை விட்டு பாகிஸ்தானுக்கு மண் அள்ளிப் போட்டுவிட்டார் என்பதே அனேகரது கருத்து. ஷெப்பட்டின் அடுத்த பலி 43 ஓட்டங்களுடன் பாகிஸ்தான் அணியை அனேகமாக நிமிர்த்தியே விட்ட யூசுப் யொகானாவை வெளியேற்றியது. இதிலும் கால்தடுப்பு ஷெப்பட்டுக்கு துடுப்பாகத் தெரிந்த அவலம் துயரமானது.

பாவம் பாகிஸ்தான். சாமி வரம் கொடுத்தும் பூசாரி வரம் கொடுக்காத நிலைக்கு ஆளாகிவிட்டது. அடுத்து இன்சமாம் ஒரு கனவான் என்பதைக் கட்டாயம் கூறியாக வேண்டும். ஆட்டமிழந்தார் என்று அறிவித்த பின்னரும், ஆட்டம் தோல்வியில் முடிந்த பின்னரும் மிகக் கௌரவமாக நடந்து கொண்டார். ஸ்ரீபன் பிளேமிங், மாவன் அத்தபத்து வரிசையில் இன்னொரு அணித் தலைவர். இறுதியாக ஒரு கேள்வி. வீரர்கள் பிழைவிட்டால் மிகக் கடுமையாகத் தண்டனை வழங்கும் ICC, ஆட்டத்தையே தலைகீழாக்கும் நடுவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிறார்கள்? ஒரு ஆலோசனை. இப்படியான கடுமையான முடிவுகளை RUNOUT ஐ தீர்மானிக்கும் முறையிலே மூன்றாவது நடுவரிடம் விட்டால் என்ன?

**- ஜோஸப் கிருஷ்ணா**

# WWW.அம்பயர்.Com.

நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டைக் கிரிக்கெட் மத்தியஸ்தம் தொடர்பில் அதிகரிப்பதா என்றொரு ஆய்வை ICC மேற்கொண்டிருந்தது. இந்த ஆய்வு சர்வதேசக் கிரிக்கெட் அணித்தலைவர்களிடம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மத்தியஸ்தம் தொடர்பில் கூடுதல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தலாம் என்பதில் அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்ரிங் மற்றும் சிம்பாப்பே அணித்தலைவர் டடேன்டா தைபு இருவருக்கும் சம்மதம் இல்லை. ஆனால், இங்கிலாந்தின் மைக்கல் வோன், தென்னாபிரிக்காவின் கிரேம் ஸ்மித், நியூஸிலாந்தின் ஸ்ரீபன் பிளெமிங், இலங்கையின் மாவன் அத்தப்பத்து, வங்களாதேசத்தின் ஹபிபுல் பஸார், கென்யாவின் ஸ்ரீவ் ரிக்கோலோ, ஐக்கிய அமெரிக்காவின் றிச்சாட் ஸ்ரேபின் ஆகியோர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.



பிலிபோடன் நிம்மதியா ஆடலாம்

பொதுவாக ரி.வி. தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த பின், மத்தியஸ் தர்களின் பாடு பெருந்திண்டாட்டமாகி விட்டது. மிக நுட்பமாக - துல்லியமாக ஆட்டத்தின் ஒவ்வொரு அம்சமும் கிரிக்கெட் வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் தெரியவருகின்றன. எனவே, மனிதக்கண்களுக்கு அப்பால் கணினிக் கண்கள் கூர்மையாக இருப்பதால் அதன்பக்கம் செல்வதில் எதுவித பிழையும் இருக்கப்போவதில்லை. வரட்டு வேதாந்தம் பேசுவதுபோல, "அப்படியானால் இனி நடுவரே தேவையில்லாத நிலை ஏற்பட்டுவிடும்" என்று புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நடுவரின் தேவையென்பது என்றும் அவசியமானதாகவே இருக்கும்.

எதிர்வரும் செப்ரெம்பரில் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் ICC கிண்ணப் போட்டிகளின் போது சில புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ICC சம்பியன் போட்டிகளில் விக்கெட் மற்றும் மைதான நடுவர் நுண்ணிய ஒலிவாங்கி மற்றும் ஒலிபெருக்கி மூலம் தொடர்புபடுத்தப்படுவார்கள் என்றும் இதன் மூலம் துடுப்பாட்ட வீரர் தொடர்பில் பந்து, துடுப்பு மற்றும் கால்களில்படுவது பற்றிச் சரியான முடிவை எடுக்கக்கூடியதாக இருக்குமென்றும், NOBALL தொடர்பில் மூன்றாவது மத்தியஸ்தரிடம் இருந்து அறிவுறுத்தல் பெறுவது தொடர்பாகவும் பரீட்சித்துப் பார்க்கப்படும் என்றும் சொல்லப்படுகின்றது. இந்த விடயத்தில் எத்தரப்புக்கும் பாதிப்பில்லாமல் எல்லாம் நடந்தால் சரிதான்.

**- ஜெயா.**

# சமுத்திர ராஜகுமாரா

அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் ஹெல்ப்ஸ், வயது பத்தொன்பது மட்டும்தான். 2004 ஏதென்ஸில் பெற்றுக்கொண்ட பதக்கங்கள் எட்டு. ஆறு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் இவரது கணக்கு. இதற்கு முன்னதாக 1980 ஆம் ஆண்டில் U.S.S.R. இன் ஜிம்னாஸ்ரிக் வீரர் அலெக்சான்டர் டிட்யாடின் பெற்ற மொத்தம் எட்டுப் பதக்கங்கள் என்ற எண்ணிக்கையை ஹெல்ப்ஸ் சமன் செய்துள்ளார். 1972ஆம் ஆண்டில் மியூனிக் ஒலிம்பிக்கில் அமெரிக்க நீச்சல் வீரர் மார்க் ஸ்பிட்ஸ் பெற்ற தங்கப் பதக்கங்கள் ஏழு. இதனை முறியடிப்பது மைக்கல் ஹெல்ப்சின் பெரும் கனவாக இருந்தது. ஆனால், அது நிறைவேறவில்லை. இருந்தாலும் அதிகூடிய பதக்கங்கள் பெற்ற அமெரிக்கர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார் அவர்.



ஹெல்ப்ஸ் நீ இன்றி நீர் இல்லை

**- வெரோனிக்கா.**


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் ஆடவர் பிரிவில் 100 மீற்றர் தங்கம் வென்றவர் யார்?
02. ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் மகளிர் ஒற்றையர் ரெனிஸ் சம்பியன் யார்?
03. மிக அண்மையில் டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் யார்?

**விளையாட்டுப் புதிர் 19**

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:.............................................................

முகவரி:.............................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 07.09.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விலாசம்: விளையாட்டுப் புதிர்-இல.19
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# நரசிம்மா

ரேபிள் ரெனிஸ் போட்டிகளில் ஒலிம்பிக்கில் ஆதிக்கம் செலுத்துவது சீனாதான். இம்முறை நான்கு தங்கங்களில் மூன்று சீனாவிற்குச் சென்றது. மேலும் மொத்தம் 3 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் என்று கூடுதலான பதக்கங்களை வென்றுவிட்டார்கள்.

இப்பொழுது அதற்கும் தலையிடி வரும்போல் இருக்கிறது. நிறைய நாடுகள் பங்கு கொள்ளும் வகையில் விளையாட்டில் மாற்றம் கொண்டுவர சர்வதேச ரேபிள் ரெனிஸ் சங்கம் முடிவெடுத்துள்ளது. இதன் மூலம் வேறு நாடுகளுக்கும் பதக்கங்கள் வெல்ல வாய்ப்பிருக்கும் என்று நம்புகிறது அது.



சினிமா நாயகர் அல்ல

இதேவேளை புதிய மாற்றங்கள் ஒரே நாட்டு வீரர்கள் இறுதிப் போட்டிக்கு வருவதைத் தடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏதோ ஒரு வகை... யில் சீனா... சிலருக்கு... குலைப்பன்... காய்ச்சல்... ஏற்படுத்தியிருப்பது நன்றாகத் தெரிகிறது. 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது சீனா. 2008 இல் உலகமே பீஜிங் நகரில் குவியப் போகிறது. சீனா 2008 இல் என்ன செய்யப்போகிறது என்று யாருக்குத் தெரியும். ஒன்றைக் கூறலாம் எந்தத் தடையும் சீன நாட்டின் பறக்கும் நாகத்தைத் தடுத்துவிட முடியாது. கழுகு உட்பட.

**- மக்டலின்**




## கடற்புலிகள் – மக்கள் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் கடற்புலிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடற்புலிகளின் பூநகரிப் பகுதிப் பொறுப்பாளர் தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பரமன்கிராய் முதல் கௌதாரிமுனை வரையிலான வீதித் திருத்தம் உட்படப் பல்வேறு விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் இடம்பெற்றன.

## மீனவர்களின் புகார்

மன்னார் மாவட்டத்தில் டைனமற்றைப் பாவித்து, சில மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருவதாக மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னார் - பேசாலை ஸ்ரீதோப்பு கடற்பரப்பிலே அதிகளவான மீனவர்கள் இந்த முறையில் மீன்பிடிப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மீன்பிடிமுறையைத் தடுத்து நிறுத்துமாறு மீனவர்கள் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச்சங்கம், கடல் தொழில் திணைக்களம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் டைனமற்றைப் பாவித்து மீன்பிடிக்கப்பட்டதால், மீனினங்கள் அழிந்து வருவதாகவும், இதனால் எதிர்காலத்தில் மீன்பிடித் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் முறையிட்டுள்ளனர். (201)

## கிணறுகள் அமைக்க முடிவு

ஆனைவிழுந்தான் கிராமத்துக்கென கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 60 குடும்பங்களுக்கு 15 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது நான்கு குடும்பங்களுக்கு ஒரு கிணறு என அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## அத்தியாவசிய வசதி அற்ற முட்கொம்பன் கிராமம்

ஸ்கந்தபுரத்திலிருந்து செல்லும் முட்கொம்பன் கிராமத்துக்கான பிரதான வீதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. அந்தக் கிராமத்துககான வைத்தியசாலை வசதியற்ற நிலையில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர் அந்தப் பகுதி மக்கள்.

மேலும், முட்கொம்பன் கிராமத்துக்கான, 3 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதியால் சாதாரணமாக துவிச்சக்கர வண்டியில் கூட பயணம் செய்ய முடியாத இக்கட்டான சூழ் நிலையிலுள்ளது. அத்தோடு அந்தக் கிராமத்துக்கான வைத்திய சாலை அற்ற நிலையில் 10 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள அக்கராயன் வைத்தியசாலைக்கே இந்த வீதியால் சென்று சிகிச்சை பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.

இந்த நிலையில் வாரத்தில் ஒரு நாள் திலீபன் நடமாடும் வைத்திய சேவை நடைபெற்று வருகிறது. இது தொடர்பில் சம்மந்தப்பட்டவர்கள் இதில் கவனம் எடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## மன்னார் மாவட்டத்தில் குடிநீரின்றி மக்கள் அவலம்

மன்னார் மாவட்டத்தில் குடிநீருக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக இந்த மாவட்டத்தின் விடத்தல்தீவு, பள்ளமடு, இலுப்பைக்கடவை, மடு, மூன்றாம்பிட்டி, ஆண்டான்குளம், கூராய ஆகிய கிராமங்கள் நீர்ப்பற்றாக்குறையால் பெரிதும் அவதிப்படுவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக விடத்தல்தீவு, மூன்றாம்பிட்டி, வெள்ளாங்குளம் வரையான கிராமங்களில் இந்தநிலை மிக மோசமாக உள்ளது. இங்கு சமையலுக்கு நீர் கிடைப்பதே கடினமாகவுள்ளது.

குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் சுகாதாரமற்ற நீராக இருப்பதால், தோல் வியாதிகள் அதிகரிக்கும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

மூன்றாம் பட்டிக்கிராமத்தில் கடும்வெயில் - வரட்சி காரணமாக மக்கள் மத்தியில் கண் பார்வை பாதிக்கப்படும் வகையிலான ஒரு நோய் மக்களைப் பாதிப்பதாகவும் கூறப்படுகிறது. (தி)

# தமிழர்களுக்கு கல்விப்பலம் வேண்டும் அதுவே விடுதலையை வெல்வதற்கு உதவும்

**-வவுனியா அரசியல் பொறுப்பாளர்**

எமது தேசியத் தலைவர் கல்வியையும், விடுதலைப் போராட்டத்தையும் தன் கண்களாகவே கருதிச் செயற்படுகிறார் என வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானவேல், வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றும்போது தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்-

"தமிழர்களுக்குக் கல்விப் பலம், கல்வி வளம் வேண்டும். அந்தப் பலம் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிகளுக்கு உதவியாக இருக்கும். பெரும் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தைப் பயன்படுத்தி, மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற வேண்டும்" கட்டடங்களை கட்டிமுடித்தால் மட்டும் போதாது. அதனைப் பாதுகாப்பதிலும் நாங்கள் அக்கறையாகச் செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (தி)

## முல்லைக் கடற்பரப்பில் வைத்து மீனவர் மீது கடற்படை தாக்குதல்

கடந்த புதன்கிழமை முல்லை மாவட்டத்திலுள்ள அம்பலவன் பொக்கனைக் கிராமத்தில் இருந்து கடல் தொழில்களுக்காகச் சென்ற மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் செயல் ஒரு மிலேச்சத்தனமானது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமாதானச் சூழ்நிலை நடைமுறையில் இருந்துவரும் இந்த வேளையில் தங்கள் ஜீபனோபாயத்துக்காக அப்பாவி மீனவர்கள் கடலுக்குச் செல்கையில், சிறிலங்கா கடற்படையினர் இந்தத் தாக்குதலை நடத்தி உள்ளனர்.

இருப்பினும் மீனவர்கள் உயிர் தப்பி இருக்கின்றார்கள். சிறிலங்கா கடற்படையினரின் இந்தச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு தெரியப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு கோடி ரூபா செலவில் புதிய கேட்போர் கூடம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் ஒரு கோடி ரூபா செலவில் புதிய கேட்போர் கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய, லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரால் அமைக்கப்படவுள்ள கேட்போர் கூடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்தக் கேட்போர் கூடத்துக்கான அடிக்கல்லை முல்லை.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா நாட்டினார்.

இதே சமயம் இந்தப் பாடசாலையின், லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரால் பாடசாலைக்கான சுற்று மதில், தண்ணீர்த் தாங்கிகள் என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

## கிளிநொச்சி மத்திய கல்லூரி மாதிரி பாடசாலையாக தெரிவு

கிளிநொச்சி மத்தியகல்லூரி மாதிரிப் பாடசாலையாக முன்மொழியப்பட்டு, தெரிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்தப் பாடசாலையில் கட்டடங்கள் அமைப்பதற்கான காணி விஸ்தீரணம் போதுமானதாக இல்லாமையால், இந்தப் பாடசாலைக் காணி 55 ஏக்கர் பரப்பைக் கொண்டது. எனினும் தற்பொழுது 17 ஏக்கர் பரப்பிலேயே பாடசாலை இயங்கி வருகிறது. மிகுதி 38 ஏக்கர் பரப்பினுள்ளும் மக்கள் குடியிருப்புகள் அமைந்துள்ளது.

இந்த பாடசாலைக் கட்டடங்களை அமைப்பதற்கு அங்கு குடியிருக்கும் மக்களை நீக்குமாறு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், அரச அதிபர்கள் ஆகியோர் விடுத்த கோரிக்கையை அந்த மக்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

## பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி உதவியுடன் குளங்கள் புனரமைப்பு

(வவுனியா)

வவுனியா - நெடுங்கேணி வடக்கு அனந்தர் புளியங்குளம், மாமடு, சேனைக்குளம் ஆகிய இடங்களில் 45 கிணறுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் 80 மலசலகூடங்கள் அமைக்கப்படும் பணிகளும் இடம்பெற்றுவருகின்றன.

நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. மேலும் முல்லைத்தீவு, சிலாவத்துறை, முடவன்குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது. உலக உணவுத்திட்டத்தின்கீழ் இந்தக் குளம் புனரமைக்கப்படுகிறது.

இதைவிட மன்னார் இலுப்பைக்கடவை, சோலை மண்டகுளம் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்தக் குளங்களின் புனரமைப்புகள் நடைபெற்று வருகின்றன. (தி)

## கண்ணகைபுரம் கிராம மக்களுக்கு கால்நடை வளர்ப்புக்கு ஊக்குவிப்பு

(அக்கராயன்)

அக்கராயன் கண்ணகைபுரம் கிராமத்தில், வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் 32க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆடுகள், பசுக்கள், கோழிகள் என்பன வழங்கப்படவுள்ளது. அத்துடன் நெற்பயிர்ச்செய்கை, சிறுவியாபாரம் என்பவற்றுக்கும் பணம் வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு போரூட் நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக நிதியுதவி வழங்குகின்றது. இந்தநிதியில் கோழி வளர்க்கும் 6 குடும்பங்களுக்கு 10ஆயிரம் ரூபாவும், ஆடுகளும் வளர்க்கும் 10 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், பசுக்கள் வளர்க்கும் 10 குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும், சிறுவியாபாரம் நெற்செய்கை என்பவற்றுக்கு 10 ஆயிரம் ரூபாவும், அடிப்படை பணமும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் அக்கராயன் 7 ஆம் துண்டுக் கிராமத்துக்கு 127000 செலவில் பொதுக்கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத்திட்டங்கள் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் கூறப்படுகின்றது.

## ஆனைவிழுந்தான் கிராமத்தில் தேசிய எழுச்சிப்பேரவை அமைப்பு

ஆனைவிழுந்தான் கிராமத்துக்கான தேசிய எழுச்சிப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கிராமத்துக்கான தேசிய எழுச்சிப் பேரவை கடந்த 31 ஆம் திகதியன்று 5 மணியளவில் தெரிவுசெய்யப்பட்டது. இதில் கிராம சேவகர் சபாரத்தினம் அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன், உட்பட பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கிராமத்துக்கான தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு செய்யப்பட்டதையடுத்து கல்வி, விளையாட்டு சுகாதாரம் போன்றவற்றின் மேம்பாட்டுக்கும் தனித்தனியான குழுக்கள் தெரிவு செய்யப்பட்டது. இந்தத் தெரிவுக்கு உட்பட்டவர்களின் செயற்பாடுகள் குறித்து, சம்மந்தப்பட்டவர்களால் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது. இதன் பிரகாரம் நிர்வாகம் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## கடல் ஆமை, பன்றி, ஓங்கில் ஆகியவற்றை பிடிக்க தடை

(முல்லைத்தீவு)

முல்லைக் கடற்பரப்பில் கடல் ஓங்கில், கடற்பன்றி, கடல் ஆமை, என்பவற்றைப் பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அழிந்து வரும் அரிய கடல் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காகவே இவற்றைப் பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்துறைப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேசமயம் கடற்தொழிலில் ஈடுபடுவோர் சுருக்குவலை. பொருஇழை வலை, வெடிகுண்டு ஆகியவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## போரூட் உதவியுடன் முன்பள்ளி அமைப்பு

வவுனியாவில் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் போரூட் நிறுவன உதவியுடன் சன்னாசிப் பரந்தனில் முன்பள்ளி ஒன்றை அமைத்துவருகின்றது.

இதேவேளை விஞ்ஞானகுளம் மற்றும் பெரியமடு ஆகிய இடங்களில் முன்பள்ளிகள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் இவை திறந்துவைக்கப்பட்டு மக்கள் பயன்படும்வகையில் இயங்கவுள்ளன.

## பொது நூலகம் இல்லாத மக்கள், மாணவர் அவதி

மன்னார் மூன்றாம் பட்டியிலுள்ள மக்கள் நூலக வசதிகள் எதுவுமின்றி, நல்ல நூல்களைப் பெறுவதிலும், வாசிப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மாணவர்கள் தமது பொதுஅறிவை வளர்ப்பதற்குத் தேவையான தேடல் முயற்சிகளில் ஈடுபடமுடியாத நிலையும் இங்குள்ளது. பொது நூலகம் ஒன்று இயங்காமையே இதற்குக் காரணமாகும்.

அத்துடன் இந்தப் பகுதிக்கு நாளாந்த செய்திப் பத்திரிகைகள் எதுவும் வருவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

**-மக்கள் அஞ்சுகின்றனர்-**

## வீதி புனரமைப்பு ஸ்தம்பித நிலையில்

ஜெயபுரம் - வன்னேரிக்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள பாலங்கள், வீதிகள் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த வீதியில், சிறிய பாலங்களின் வேலைகள் யாவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் ஐந்து கண் மதகு என்று அழைக்கப்படும் முடக்கன் ஆறு சொல்லும் பாரிய மதகு புனரமைப்புக்காக உடைக்கப்பட்ட நிலையிலுள்ளது. இதனால் வாகனங்கள் செல்வதற்கென மேலதிக வீதியொன்று அருகில் போடப்பட்டுள்ளது.

அடுத்து வருவது மாரிகாலம். ஆனால், குறித்த பாலத்தின் வேலைகள் யாவும் ஸ்தம்பித நிலையிலுள்ளது. மழைகாலங்களில் ஏற்கனவே இந்தப் பாலத்தின் மட்டத்துககு மேலாக கூடுதலான அளவு நீர் பாய்வது வழமை.

ஆனால், இந்தப் புனரமைப்புப் பணிகள் மழைகாலத்துக்கு முன் முடிவடையாது என்றே தோன்றுகின்றது. இந்த நிலையில் மழைக் காலங்களில் இந்த வீதியில் பயணம் செய்வது முற்றாகத் தடைப்படும் என்றே மக்கள் அஞ்சுகிறார்கள்.

## வடிகால் அமைப்பை புனரமைக்க கோரிக்கை

வவுனியா வடக்கு - நெடுங்கேணியில் நகரில் அமைக்கப்பட்டிருந்த வடிகால் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

1997ஆம் ஆண்டு சிறிலங்கா படையினர் மேற்கொண்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கையின் போது நெடுங்கேணி நகரம் முற்றாக அழிக்கப்பட்ட போது அதனுடைய வடிகால் அமைப்பும் அழிக்கப்பட்டது. இந்த அழிவுகளின் பின்பும் இன்றுவரை, நகர வடிகால் அமைப்புக்கள் புனரமைப்பு செய்யப்படாத நிலை காணப்படுகின்றது.

இந்த வடிகால் அமைப்புகளை புனரமைக்க வேண்டி நெடுங்கேணி நகர வர்த்தகர்கள், வவுனியா வடக்கு பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை*
*வீயாது பின்சென்று அடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் உத்தரவாதமும்! தமிழ் மக்களின் சந்தேகங்களும்

நாட்டில் அரசியல் நெருக்கடிகள் உட்படப் பல்வேறுபட்ட குழப்பங்களும். சிக்கல்களும் அதிகரித்து வரும் சூழலில் - தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாடு சென்று, நீண்ட நாட்கள் தங்கிநின்ற ஜனாதிபதி சந்திரிகா - தனது ஐரோப்பிய விஜயத்தை இடைநடுவில் நிறுத்திக்கொண்டு, நேற்று முன்தினம் காலை அவசரமாக நாடு திரும்பியதும், வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அவரைச் சந்தித்தபோது மீண்டும் யுத்தம் வரவே வராது என்று திடமாகக் கூறியதாகவும். இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றைக் காண்பதில் தனக்குள்ள நம்பிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது.

ஆனால், அது நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய சூழ்நிலை அமைந்துள்ளதா? என்ற கேள்வி எழும்போதுதான் பதில் கூறுவதென்பது சங்கடமாக உள்ளது.

மீண்டும் யுத்தம் வரவே வராது என அடித்துக்கூறும் இதே ஜனாதிபதி தான் 1995 இல் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றி, சமாதானத் தேவதையாகத் தன்னை இனம்காட்டியபடி, இனப்பிரச்சினைக்கு தீர்வு நிச்சயம் காணப்படும் என்று கூறிக்கொண்டு, சமாதானப் பேச்சுக்களை பரபரப்பாக ஆரம்பித்தார் என்பதை நாம் மறக்கவில்லை.

பின் மிகச் சிலமாதங்களிலேயே சமாதான முயற்சிகளில் இவரின் நேர்மையீனம் வெளிப்பட ஆரம்பித்ததும், தனது சுயத்தை நிரூபிக்கும் வகையில் நகர்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினார். பண்டா பரம்பரையின் தமிழ் மக்களுக்கு எதிரான ஏமாற்றுத் தந்திர மூலோபாயம் எத்தகைய தன்மையைக் கொண்டது என்பது ஒரு புதிதான விடயமாக தமிழ் மக்களுக்கு இருந்ததே கிடையாது.

ஜனாதிபதி 1995 ஆம் ஆண்டு முதன் முதல் பதவிக்கு வந்தது முதல் இன்று வரையிலான காலப்பகுதிகள் - சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக மேற்கொண்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவுமில்லை என்றே கூற வேண்டும். இங்கே குறிப்பிடுவது வாய்ப்பேச்சளவிலான நடவடிக்கைகளையல்ல. ஆத்மார்த்தமான விருப்புடன் கூடிய உறுதியானதும், தீர்க்கமானதுமான இலக்கைக் கொண்ட சமாதான நடவடிக்கைகளேயாகும்.

உண்மையில் அவர் பெருவிருப்புடனும், தீவிரத்துடனும் நாட்டின் சகல வளங்களையும் பயன்படுத்தி, ஆத்மார்த்தமாக ஈடுபட்டதென்னவோ சமாதானத்துக்கான யுத்தம் என்ற தமிழின அழிப்பு நடவடிக்கையில் தான் என்பதை எவருக்கும் விபரமாக விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

1995 ஆம் ஆண்டில் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் ஆரம்பித்து - கடைசி அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கை தோல்வி கண்ட 2001 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை ஜனாதிபதி யுத்த சன்னதராகவே இருந்தாரேயன்றி, சமாதான முன்னெடுப்பாளராக இருக்கவில்லை என்பதை யாருக்கும் விபரிக்கவேண்டிய தேவையுமில்லை.

அதுதான் உண்மை வரலாறு. இன்று மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா சமாதானம் பற்றி மேலும் பேசவும், இருப்பதைப் பாதுகாக்கவும் விரும்புகிறார் என்றால், அதற்குக் காரணம் தவிர்க்கமுடியாத தேசிய நெருக்கடிகளினதும், சர்வதேச அறிவுறுத்தல்களினதும், பொருளாதார வெறுமைநிலையினதும் அழுத்தங்களேயாகும். ஜனாதிபதியும் - அரசும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளமைக்கு இதற்கு வேறு காரணமெதுவு மில்லை.

தன்னைச்சூழ தன்னை வலுப்படுத்தி, பலப்படுத்தும் சக்திகளாக சமாதான எதிர்ப்பாளர்களையே குவித்து வைத்திருப்பவரான ஜனாதிபதி - அமைதி முயற்சிகள் தொடர்பாக அர்த்த புஷ்டியான நர்வுகளை மேற்கொள்வார் என எப்படி நம்புவது?

லண்டனுக்கு இந்த முறை புறப்படுமுன்னர் கூட. 'கிழக்கில் நெருக்கடிகள்' அதிகரித்தால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படையினரை அணிவகுத்துச் செல்ல உத்தரவிடுவேன் என அதிகாரத்தொனியுடன், அதன் விளைவுகள் எப்படியிருக்குமென கொஞ்சமும் முன்யோசனையின்றி கூறி, அறிக்கை விட்டவரும் இதே ஜனாதிபதிதான் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

லண்டனிலிருந்து திரும்பியதும் மீண்டும் போர் மூளவே மூளாது என்று சத்தியம் செய்கிறார். தனது சமாதான எதிர்ப்புத் தோழர்களான ஜே.வி.பியினரைக் கையாள்வது தனக்கு எந்த வகையிலும் சிக்கலான விடயம் இல்லை என்றும் கூறுகிறார். அது ஒரு நெருக்கடியான விவகாரம் அல்ல என்றும் தெரிவித்துள்ளார். இது வெறும் வார்த் தைகளால் உறுதிப்படுத்தி நம்பவைக்கும் விடயமே அல்ல. ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு அவர்களினதும், ஹெல உறுமய பிக்குகளினதும், ஏனைய பேரினவாதக் குழுக்களினதும், எல்லாவற்றுக்கும் மேலாக மகாசங்கத்தினரதும், மகாநாயக்கர்களினதும் ஆதரவும், அங்கீகாரம் இல்லாமல் எந்த வித முன்னேற்றமும் ஏற்படாது என்பது உறுதி.

இதற்கு மேல் எதிர்க்கட்சியும் ஒன்றிணையவேண்டும். இவற்றையெல்லாம் ஜனாதிபதி சாத்தியமாக்குவாரா? இதுவே இன்றுள்ள மிக முக்கியமான, மிகவும் சந்தேகத்தை தூண்டும் கேள்வி.

சமாதானத்தை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குரியதே... அந்தப் பொறுப்பை அவர்கள் ஆத்மசுத்தியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். குறுகிய மூலோபாயங்களும், குயுக்தியான தந்திரோபாயங்களும் இதற்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை. இதனையும் ஆட்சியதிகாரத்திலுள்ளோர் புரிந்துகொள்ளவேண்டும்.

## நாடும் நடப்பும்



செய்தி:-
நாடு திரும்பிய ஜனாதிபதி சமாதான முன்னெடுப்பு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடவுள்ளாராம்!

## நெடுந்தீவின் முக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்த தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றபோது மக்களின் கருத்துப்பகிர்வுகள் கேட்டறியப்பட்டது. இந்தக் கருத்தமர்வில் நெடுந்தீவில் தற்போது நிலவும் முக்கிய பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு, அது தொடர்பாக ஆராயப்பட்டது. அவற்றில் முக்கிய கருத்துக்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு-

நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் தற்போது மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கடற்தொழிலையே நம்பி வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அதனால், கடற்கரையை அண்டிய பகுதிகளில் குடியிருப்புக்கள் அமைக்கக்கூடிய இட வசதிகள் இன்மையாலும், போதிய வசதிகள் இன்றியும் தற்போது வாழ்கின்றனர். அவர்களுக்கான குடியிருபபுக்களை அமைக்க, காணிகள் கொள்வனவு செய்யக்கூடிய பொருளாதார வசதிகளற்றவர்களாகவும் உள்ளனர். எனவே குடியிருப்புக்களை அமைத்து தமது அன்றாட வாழ்வை சுமுகமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நெடுந்தீவிலுள்ள கால்நடைகளை விற்பனைக்கென யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்ல அனுமதிகள் கிடைக்காமையினால், கால்நடை வளர்ப்போர் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதுடன், தற்போதைய கடும் வரட்சிகாரணமாக கால்நடைகள் இறந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளதால் கால்நடைகள் ஏற்றுவதறகான அனுமதியைப் பெற்றுத்தரவேண்டும்.

துறைமுகப் பகுதி மிகவும் துர்நாற்றமடைந்த நிலையில் இருப்பதனால், இங்குள்ள படகுகள் தரைதட்டி பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றன. எனவே, துறைமுகப் பகுதியை ஆழமாக்கச் சீராக வைத்திருக்க ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

நெடுந்தீவின் பல பிரதான வீதிகள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து பாவனைக்குதவாத நிலையில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இதனையும் புனரமைப்புச் செய்யவேண்டும்.

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து சேவையைச் சீராக்கி, குமுதினிப்படகை விரைவிலே திருத்தம் செய்வதுடன், புதிய படகுகளையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது சொந்தத் தேவைக்காக மணல் ஏற்றுவதற்குத் தற்போது தடைகள் இருப்பதனால், அதனையும் நீக்கி அனுமதிபெற வழிசமைக்க வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் பதிலளித்து உரையாற்றிய நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.கணேசலிங்கம் -

சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் உரியவர்களுடன் பேசப்படுகின்றபோதும், நெடுந்தீவு துறைமுகப் பகுதியை சிரமதான முறையிலேயே ஆழமாக்க அனைவரும் முன்வரவேண்டுமெனவும், இதேபோலவே தேவை ஏற்பட்டால் குமுதினிப் படகு தரையிறக்கத்தையும், சிரமதான முறையில் செய்ய முன்வரவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை - நெடுந்தீவு உதவி அரச அதிபருடாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனுமதிப் பத்திரம் பெறுதல் தொடர்பான வேலைகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதுடன், இந்தியாவிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதிலும் அசிரத்தை காட்டப்பட்டு வருவதாகும்.

அண்மையில் பெரும் நெருக்கடிக்கு மத்தியில் வழங்கப்பட்ட உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றின் உதவிப் பொருட்கள் கடந்த சில தினங்களுக்கு முன் இரவு வேளைகளில் சிலருக்கு வழங்கப்பட்டது தொடர்பாகவும், கடும் ஆட்சேபம் தெரிவித்தார். கூடிய விரைவிலே சகல பிரச்சினைகளுக்கும் ஒரு வகையில் தீர்வு கிடைக்க வழிசமைக்கப்படும் எனவும் கூறினார். (113)

### ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி

## நேர்முகத் தேர்வில் சித்தியடைந்தோர் கலந்துரையாடலுக்கு அழைப்பு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறிக்கான நேர்முகத் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் செவ்வாய்கிழமை மாலை 3.00 மணிக்கு, பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த நேர்முகத் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களின் விபரம் பின்வருமாறு -

நடராஜா பஞ்சசீலன் (அச்சுவேலி), சசிகரன் ரேணுகா (யாழ்ப்பாணம்), செல்லத்துரை பிரதீபன் (கிளிநொச்சி), சாந்தநாயகி பொன்னம்பலம் (கொக்குவில்), வைதேகி சிவஞானம் (கொக்குவில்), கலைவாணி கந்தசாமி (சாவகச்சேரி) துஷ்யந்தினி தர்மராஜா (சுன்னாகம்), ஜமுனாமலர் சந்திரசேகரம் (உரும்பிராய்), கலைத்தேவி பொன்னையா (முல்லைத்தீவு), சுகந்தினி சுப்பிரமணியம் (கொக்குவில்), ஆரணி பூபாலசிங்கம் (நீர்வேலி), குணவதனி பரஞ்சோதி (கரவெட்டி), தங்கவடிவேல் சிவாஸ்கரன் (பரந்தன்), கவிதா சிவபாதம் (யாழ்ப்பாணம்), ஞானப்பிரகாசம் அன்ரனி தவச்செல்வம் (யாழ்ப்பாணம்), வேலும்மயிலும் கோபிராஜ் (புலோலி), அருள்மொழி சுப்பிரமணியம் (முல்லைத்தீவு), தில்லையம்பலம் கிருஷ்ணரூபன் (யாழ்ப்பாணம்), பிரவீனா சிவஞானசுந்தரம் (சுன்னாகம்), சுதந்திரன் சுதர்சினி (தூளையடி), கோமதி சுந்தரலிங்கம்(சுன்னாகம்), ஜமுத்திரா தர்மலிங்கம் (கிளிநொச்சி), கதிரவேலு டேகீஸ்வரராசன் (திருநெல்வேலி), லவநிசா செல்வநாயகம் (யாழ்ப்பாணம்), குமாரசாமி மேனகா (கொக்குவில்), யுசெந்தி பாலபரமேஸ்வரன் (உரும்பிராய்).

## வலி - மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் பொதுமக்களுக்கான அறிவுறுத்தல் பிரசுரம்

வலிகாமம் மேற்கு சுழிபுரம் - பிரதேசசபை தனது எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புக்கள், அரச, தனியார் அலுவலகங்கள், பொதுமக்களினது வீடுகளுக்கு வியாபார உரிமைப் பத்திரம், சோலைவரி, குப்பைகள் ஏனைய கழிவுகள் அகற்றல் தொடர்பான விதிமுறைகளை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்து வருகிறது.

இந்தப் பிரசுரத்தில் இந்த ஆண்டுக்கான வியாபார நிலைய உரிமம் பெறல், பொதுவீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வியாபாரப் பொருட்களைக் காட்சிக்கு வைத்தல், தொடர்பான விடயங்கள் உள்ளதுடன் அனுமதியின்றி அமைத்த விளம்பரப் பலகைகள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாகக் கட்டடத்திலிருந்து வெளிப்புறமாக நீண்டிருக்கும் விளம்பரப் பலகைகளை ஒருவார காலத்துக்குள் அகற்றுமாறும் கோரப்பட்டுள்ளது.

வீடுகள் மற்றும் கழிவுகளைப் பொது இடங்களில் வீசாது, அதற்கெனப் பெட்டியமைத்துக் கழிவுகளைப் போடுமாறும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், சுழிபுரம் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்தார்.

குறித்த காலத்தில் தமக்கு ஒத்துழைப்புத் தந்து பிரதேச வளர்ச்சியில் அக்கறை கொள்வதுடன், சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றுமாறும் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்திருக்கின்றார்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதுடன், தொற்று நோய்களைத் தடுக்கவும் விபத்துக்களைக் குறைக்கவும் வழிவகை செய்யவேண்டும் எனவும் கடந்தமாதம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட தாகவும் பிரசுரத்தில் தெரிவிக்கப்படுகின்றது. (91)

## நேர்காணல்

## பட்டனைந்து

# தமிழரின் பண்பாட்டுக் கலை வடிவமாக நாட்டுக்கூத்தை வளர்த்தெடுக்க வேண்டும்

**குருநகரைச் சேர்ந்த தம்பித்துரை யேசுராசா நீண்ட காலமாக நாடகங்கள், நாட்டுக்கூத்துக் கலைகளில் ஈடுபட்டு வருபவர். அத்துடன் சிறுவர், பெரியவர்களைப் பயிற்றுவித்துப் பல படைப்புகளைத் தந்துள்ளார். 'நமது ஈழநாடு' வாசகர்களுடன் அவரைப்பற்றிப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் முனைந்தபோது, எந்தவித தட்டிக்கழிப்பும் இல்லாமல் தந்த செவ்வி பின்வருமாறு -**



**உங்கள் கலையுலகப் பிரவேசம் பற்றிச் சொல்லுங்கள்?**

1961 ஆம் ஆண்டு முதன்முதலாக 'வாழ்க்கைப் புயல்' என்னும் நாட்டுக்கூத்தில் முழுக் கதாபாத்திரம் ஏற்று நடித்தேன். அப்பொழுது எனது வயது 12.



அந்தக் காலத்தில் இரவுமுழுவதும் கூத்து ஆடும் காலம். நான் இரவு முழுவதும் நடிப்பேன். இது தான் என்னைக் கலையுலகுக்குக் கொண்டு வந்த கதை.

**நீங்கள் இதற்கு வழி காட்டியாக யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

எனது கலையுலக வழி காட்டியாக - தாயார் மற்றும் மூத்த சகோதரர் மிருதங்க வித்துவான் த.பாக்கியநாதன், த.யோசெவ் (கட்டப்பொம்மன்), த.பிலிப், அண்ணாவியார் சாமிநாதன், மாணவ நண்பர்களான- கலையார்வன், கு.இராயப்பு, சி.ம. நெல்சன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

**இதுவரை எத்தனை நாடகங்கள் நடித்துள்ளீர்கள்?**

அவர் :- "குமுதம்", "நிராசை", "திருந்திய உள்ளம்", "பொறுமையின் எல்லை", "சாம்பிராட் அசோகன்", "மலர்ந்த ரோஜா", "யூலியஸ் சீசர்", "குமணன்", "காணாத தூரம்", "களம் தந்த களங்கம்", "புலம் புகுந்த புனிதன்" ஆகிய 11 நாடகங்களில் நடித்துள்ளேன்.

**இவற்றுள் உங்களுக்குப் புகழ் பெற்றுத் தந்தவை?**

"திருந்திய உள்ளம்", "சாம்ராட் அசோகன்" ஆகிய நாடகங்களும் "வாழ்க்கையின் புயல்", "போர்க்களம்", "புரட்சித் துறவி", "மலைமேற்கொலை", "தேவசகாயம் பிள்ளை" தென்மோடி நாட்டுக்கூத்து ஆகியன.

**நாடகங்களைப் பயிற்றுவித்து இருக்கிறீர்களா?**

ஆம்! "திருந்திய உள்ளம்", "கள்ளோ காவியமோ" (நகைச்சுவை இசை நாடகம்), "பொறுமையின் எல்லை", "மலர்ந்த ரோஜா", "துன்பத்தின் பின்" போன்றவற்றையும் "தர்மசீலன்", "போர்க்களம்", "மூவாராசா" ஆகியனவும் -

வன்னியில் இடம்பெயர்ந்து வாழ்ந்தபோது - "பத்துக் கன்னியர்", "தற்சமயம் மலைமேற்கொலை", "தேவசகாயம்பிள்ளை" தென்மோடி நாட்டுக்கூத்துக்களையும் பயிற்றுவித்துள்ளேன்.

**சாதாரண வசன நாடகம் என்றில்லாமல் - இசை நாடகம், நாட்டுக்கூத்து என்பனவற்றில் பங்கு கொண்டிருக்கிறீர்கள். அவை பற்றி -**

இசை நாடகமென்றால் 'கள்ளோ, காவியமோ' எனும் ஒரே ஒரு நகைச்சுவை நாடகத்திலும், 'வாழ்க்கையின் புயல்' நாடகத்திலும், 'அழியார் போர்க்களம்', 'படைவெட்டு', 'துன்பத்தின் பின்', 'யூதகுமாரன்', 'புரட்சித்துறவி', 'வீரமாதேவி', 'தேவசகாயம்' ஆகிய வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்களை பயிற்றுவித்ததும், பங்களித்ததும் எனக்குத் திருப்தியைத் தந்தது.

**கலைத்துறைச் சேவைக்காக பெற்றபட்டங்கள் பாராட்டுக்கள் எவையெவையெனக் கூற முடியுமா?**

'திருந்திய உள்ளம்' நாடகத்தில் சிறந்த நடிகன். 'புரட்சித் துறவி' சிறந்த நாடகம். 'சாம்ராட் அசோகன்' சிறந்த நடிகன். 'தேவசகாயன்' நாட்டுக்கூத்தில் பிரதான பாத்திரம் ஏற்றும் பயிற்றுவித்த துக்காகவும் பொன்னாடை போர்த்தி, அண்ணாவிப் பட்டமும் வழங்கப் பட்டன.

**சமகாலத்தில் தொய்வடைந்து போயுள்ள நாடக உலகை தூக்கி நிமிர்த்துவதற்கு நீங்கள் தெரிவிக்க விரும்புவது?**

நல்ல கேள்வி ஒன்றைக் கேட்கின்றீர்கள். அன்று குருநகர் பகுதிகளில் எத்தனையோ நாடக, நாட்டுக்கூத்து மன்றங்கள் செயற்பட்டு வந்தன.

நாடகம், நாட்டுக்கூத்துப் போட்டிகள் என்றும் கடந்த காலம் இருந்தது. ஆனால், இன்று அத்தகைய அமைப்புக்கள் இருப்பதாக அறிய முடியவில்லை.

இது கவலைக்குரிய விடையமாகும். அதற்கு இடப் பெயர்வுகளும் காரணமாக உள்ளது.

இன்று எமது மக்களிடையே சினிமா மோகம் - தொலைக்காட்சிகளினூடாக மிகவும் மோசமானளவு குடிகொண்டுள்ளது. மேலும் இன்றைய சூழ்நிலையில் ஒரு நாடகத்தையோ, நாட்டுக்கூத்தையோ எழுதுவதற்கும், அதைப் பின்பற்றுவதற்கும் திறமையானவர்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

இருந்தும் இந்த நிலையிற்கூட, ஒரு சிலர் தமது சுய முயற்சிகளால் நாடகங்களை, நாட்டுக்கூத்துக்களை பெரும்பொருட் செலவில் அரங்கேற்றுவதையும் காணலாம்.

தமிழரின் பண்பாட்டுக்கலை வடிவமான நாட்டுக்கூத்தை அழிந்து போகவிடாமல், சிரமங்கள் மத்தியிலும் முன்னெடுக்க வேண்டுமென்று, பரந்துபட்டு வாழும் கலைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**இறுதியாக நீங்கள் தெரிவிக்க விரும்புவது?**

பாரம்பரிய இயல், இசை, நாடக வடிவமானது நாட்டுக்கூத்தை பயிற்றுவிக்கும் அண்ணாவிமார்கள் தாள நயத்தை மிகவும் கவனிக்க வேண்டும். தற்போதைய கலைஞர்களிடையே அந்தக் குறைபாடு இருந்து வருகிறது.

அண்ணாவியார் சாமிநாதன், பேக்மன் ஜெயராசா போன்ற பழம் பெரும் கலைஞர்கள் மத்தியில், பழமை வாய்ந்த நாட்டுக்கூத்து மெட்டுக்களையே மரபு கெடாமல் நவீனப் படுத்தி ஆடும் ஆற்றல் இருந்தது, இருக்கிறது.



மேலும், தொலைக்காட்சிப் பெட்டியையே நம்பி இருக்கும் எமது இளைய சமூகத்தினரை - திசை திருப்ப நான் முன்பு கூறியதுபோல் நடிப்பிலும், பாடும் மெட்டுக்களிலும் புதுமையைப் புகுத்தி - கேட்போர், பார்ப்போர் மத்தியில் வழிப்புணர்வைத் தோற்றுவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அப்பொழுது எதிர்காலத்தில் நமது பாரம்பரிய கலை வடிவமான நாட்டுக்கூத்தை அழிந்துவிடாமல் காப்பாற்ற முடியுமென்பது எனது கருத்தாகும். (206)

## முகாமைத்துவம்

## வணிகன்

# அலுவலக நிர்வாகத்தில் ஆளணி முகாமைத்துவம்



அலுவலக நிறுவனத்தில் ஆளணி முகாமையே - ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

ஏனெனில், இவையே ஏனைய துறைகளை இயக்கும் ஊழியர்களை உள்ளடக்கியுள்ளது. இதனைச் சரியாக முகாமை செய்து - ஊழியரின் அக்கறை, விசுவாசம் என்பவற்றின் மூலம் கூடிய வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதே ஆளணி முகாமையின் நோக்கங்களில் ஒன்றாகும்.

ஆளணி முகாமையானது தற்போது நிறுவனங்களில் தனி ஒரு பிரிவாக உருவாக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாக பல்வேறு ஊழியர் மேம்பாட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன அவையான -

1. ஆட்சேர்ப்பு
2. ஒழுங்கு முறையான பயிற்சி
3. கவர்ச்சிகரமான சம்பளக் கொள்கை.
4. பதவியுயர்வு, மேற்பார்வை.

போன்றவற்றால், ஊழியர் ஒழுங்குணர்வு கட்டுப்படுத்தப்படுவதுடன், அவர்கள் பணியில் திருப்தியையும் ஏற்படுத்த முடியும் என கருதப்படுகின்றது.

அலுவலக ஆளணி முகாமையில் பின்வரும் முறைகள் பின்பற்றப் படுகின்றன. இவற்றின் மூலம் ஊழியர் திறமைகள் மதிப்பிடப் படுகின்றன.

### பதவியின் தரங்களைக் குறித்தல்.

பதவியின் தரம் குறித்தல் என்பது - அலுவலகத்திலுள்ள பதவிக்குரிய பணிகளின உள்ளடக்கத்தை அறிவியல்பூர்வமாக மதிப்பிட்டு, அவற்றின் பரந்த பகுதிகளுள் வகைப்படுத்தலே பணியின் தரங்களைக் குறித்தலாகும்.

இந்தத் தரவுகளைப் பிரிப்பதற்கு அமைய, சம்பள அளவுத் திட்டங்கள் மதிப்பிடப்படும் தரம் குறித்தல் நிறுவனத்தில் பணியாற்றும் பதவியினரின் பணிகளின இயல்புக்கு ஏற்ப, தர எண்களால் நெடுங்கணக்கு ஒழுங்கிலும் காணப்படும்.

உதாரணமாக :- A- 00012
B- 00012

பதவியின் தரங்கள் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி விபரக் கூற்றுக்களை தயாரிப்பதன் மூலம் அறியப்படும். அவையாவன -

1. அனுபவம்
2. பணியின் சிக்கல்
3. சுறுசுறுப்பு
4. பொறுப்பு
5. கல்வி
6. எதிர்காலத்தை திட்டமிடும் ஆற்றல்

இவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் தரங்கள் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு தரங்களைக் குறிப்பதன் மூலம் நன்மைகள் ஏற்படும் என எதிர்வு கூறப்படுகின்றது.

1. பதவி உயர்வு, சம்பள உயரவுகள் அமுல்படுத்த உதவுதல்.

2. குறிப்பிட்ட பதவிக்கு நபர்களைத் தெரிவுசெய்ய உதவுதல்.

3. சம்பளம் சம்மந்தமாக ஏற்படும் குறைபாடுகளைக் குறைத்தல்.

4. குறிப்பிட்ட தரப்பினரை இலகுவாக அடையாளம் காண உதவுதல்

5. நிர்வாகம் - இலகுவாக பதவி தரப்பினரை அடையாளம் காண உதவுதல்.

### திறமையை மதிப்பிடல்.

இது ஊழியரை ஊக்கப்படுத்தல் செயல்முறைகளில் ஒன்றாகும். அதாவது ஊழியர்களிடையே- அவர்களுடைய திறமைகள் மாறுபட்டு காணப்படும். எனவே, திறமையுடைய ஊழியர்களை இனங்கண்டு, அவரை ஊக்கப்படுத்தல். இதன் அடிப்படையில் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, தொழில் முன்னேற்றம் என்பன வழங்கப் படும்.

சிறப்புத்திறனை அளவிடல் வழக்கத்தில் பின்வரும் அம்சங்கள்முக்கியத்துவம் பெறுகின்றன.

1. பணியினுடைய தரம்
2. பணியினுடைய அளவு
3. ஒத்துழைப்பும், விசுவாசமும்
4. நம்பகத்தன்மை.

இவ்வாறு கணிப்பிடப்படும் திறமை மதிப்பீடானது - பின்வரும் அனுகூலங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

1. ஊழியர்கள் தமது நிலை

1. ஊழியர்கள் தமது நிலைகளை அறிந்து விருத்தி செய்யலாம்.

2. ஆற்றலும், விசுவாசமும் உடைய ஊழியர்கள் பாராட்டப் படுவர்.

3. நியாயமான பதவி உயர்வு முறைக்கு வழிவகுக்கும்.

4. போட்டி ஒன்று உருவாகி காணப்படுவதால் ஊழியர் திறன் விருத்தி அடையும்.

இந்தத் திறமைகள் ஊழியர்களின்திறமைக்கு அமைய பொதுவாக நான்கு முறைகளாகக்

1. அதிவிசேட திறமை 100- 80 புள்ளிகள்
2. அதிதிறமை 80 -60 புள்ளிகள்
3. சராசரி 60 - 40 புள்ளிகள்
4. சராசரி கீழ் - 40 கீழ்

இதன் மூலம் ஆளணியினரின் திறமைகள் மதிப்பிடப்பட்டு, அவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு, வேறுபல நலச்சேவைகள் வழங்கப்படுகின்றன.

இதுவே ஆளணி முகாமையின் முக்கியமாக பின்பற்றப்படும் முறைகளாகக் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

எனவே, அலுவலக நிர்வாகத்தில் ஆளணி முகாமை மேலும் சிறப்பாக அமைய இது உதவும் என கருதப்படுகின்றது.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் இருபது பேர் பலி; 36 பேர் படுகாயம்

ஈராக்கின் கிர்குக் நகரிலுள்ள பொலிஸாரின் பயிற்சி வழங்கும் நிலையத்துக்கு முன்னால் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டதுடன் 36 பேர் படுகாயமடைந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பயிற்சி பெறும் பொலிஸார், மற்றும் பொது மக்கள் ஆகியோர் இந்த நகரத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தத் தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவ இடத்தில் நின்ற ஏழு கார்கள் தீப்பற்றி எரிந்து நாசமாகின. காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகள் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளன. சம்பவ இடத்திலுள்ள கட்டடங்களில் இருந்தவர்களும் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

பொலிஸாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கையே இதுவென கிர்குக் பொலிஸ அதிகாரியான கேணல் சர்கத் குவாடிர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த வீதியை பொலிஸார் போக்குவரத்துக்குத் தடைசெய்துள்ளனர். அத்துடன், எச்சரிக்கைக்காக வானத்தை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

கிர்குக் பிரதேச பொலிஸ் இயக்குநரான ஜெனரல் தொர்ஹ்ஹான் அப்துல் - ரஹ்மான் - யூசுப்பின் தகவல் படி இந்தத் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டு 36 பேர் படுகாயமடைந்ததாகத் தெரிவித்தார்.



# கிளின்டனுக்கு மாரடைப்பு வைத்தியசாலையில் அனுமதி



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் அடுத்தவாரம் இதயவால்வு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளாரென அவரது மனைவி ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம், நெஞ்சுவலி, மற்றும் சுவாசிப்பதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பில்கிளின்டன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கொழுப்புச் சத்துக்கள் நிறைந்த உணவுகள் மீது கிளின்டனுக்கு உள்ள அலாதிப் பிரியமே இவரது மாரடைப்பிற்குக் காரணமென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பில்கிளின்டன் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் போது மாரடைப்பிற்கான எவ்வித அறிகுறிகளும் தென்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர்மாதம் இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜனநாயகக் கட்சியின் சார்பில் பிரசாரங்களைச் செய்வது கிளின்டனது உடல் நிலைக்கு ஏற்புடையதல்ல என வைத்தியர்கள் தெரிவித்துள்ள நிலையில் ஏற்கனவே ஒழுங்கமைக்கப்பட்ட சில தேர்தல்பிரசாரக் கூட்டங்களை கிளின்டன் இடைநிறுத்தியுள்ளார்.

இதேசமயம் தேர்தல் பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுவரும் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் ஹெரி ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கிளினடனுக்கு ஆறுதல் செய்திகளை அனுப்பியுள்ளனர்.




# ரஷ்ய பணயக் கைதிகள் மீட்பு சம்பவம்
# உயிரிழந்தோர் தொகை 322 ஆக உயர்வு



ரஷ்யாவின் பெஸ்லான் நகரில் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் ஆகியோரை மீட்கும் நடவடிக்கையின்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 322 ஆக உயர்ந்துள்ளதுடன், காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 700இற்கும் மேல் உயர்ந்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் 155 சிறுவர்களின் உடல்கள் இதுவரை பாடசாலைக் கட்டடத்திலிருந்து மீட்கப்பட்டு பெஸ்லான் நகருக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக வடக்கு ஒசெஸ்ரியாவின் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

பாடசாலையில் கடத்தல்காரர்களால் கண்ணிவெடிகள் மற்றும் பொறிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதால் மீட்பு நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற பாடசாலைப் பகுதிக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் இரவு விஜயம் செய்தார். பின்னர் அங்கிருந்து சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டவர்களையும் சென்று பார்வையிட்டார்.

காயமடைந்தவர்களுடன் உரையாடுகையில், ரஷ்ய படையினர் பாடசாலை மீது எந்தத் தாக்குதலையும் நடத்தத் திட்டமிட்டிருக்கவில்லையெனவும், இந்தத் துயரம் நிறைந்த சம்பவத்தை கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்டதனைத் தான் நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு ஒசெஸ்ரிய நாடாளுமன்ற பெண் பேச்சாளரான பாத்திமா கபாலோவா தெரிவிக்கையில் - 250 பாடசாலை சிறுவர்கள் உயிரிழந்தது உறுதிப்படுத்தப்பட்டதெனக் கூறினார்.

காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்களின் விபரங்களை அறிய உறவினர்கள் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் பெஸ்லான் நகரில் நின்றதாக பி.பி.ஸியின் ஜொனதன் சார்லஸ் தெரிவித்தார்.

இவ்வாறு நின்றவர்களில் பலர் தமது பிள்ளைகள் உயிருடன் உள்ளார்களா அல்லது காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பது தெரியாமல் நின்றதாகவும், வைத்தியசாலையும் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை வழங்குவதனால் நெருக்கடி நிலையில் உள்ளதனால் இது தொடர்பான தகவல்களை அவர்களுக்கு வழங்கமுடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீட்பு நடவடிக்கையில் 10 ரஷ்ய கொமாண்டோப் படையினர் உயிரிழந்ததுடன் 18 பேர் காயமடைந்ததாக ரஷ்ய பொலிஸாரை மேற்கோள்காட்டி இன்ரபக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் 27 கிளர்ச்சியாளர்களைக் கொன்று மூவரை சிறைப்பிடித்ததாக ரஷ்ய படையினர் தெரிவித்தனர்.

சுமார் 40 கிளர்ச்சியாளர்கள் பாடசாலை வளாகத்தினுள் இருந்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் கடத்தல் சம்பவத்துக்கு அமெரிக்க அதிபர் புஷ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



## ஈராக்கில் படுகொலை செய்யப்பட்ட
# நேபாள பிரஜைகள் 12 பேரில் ஒருவரது சடலம் கண்டெடுப்பு



ஈராக்கில் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட 12 நேபாளப் பிரஜைகளில் ஒருவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நேபாள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேபாளப் பிரஜைகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் தோன்றியுள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் நீடிக்கப்பட்டது.

நேபாளப் பிரஜைகள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை ஜமாப் பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக நேபாள அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

கிளர்ச்சியாளர்கள் பள்ளிவாசல் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பாக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான ஆறு உறுப்பினர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம் ஈராக்கில் உள்ள நேபாளப் பிரஜைகள் அனைவரையும் ஈராக்கைவிட்டு வெளியேறுமாறு நேபாள வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் பொதுக் கட்டடங்களுக்கு பொலிஸாரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை, கட்டார் விமானசேவை, கல்வ் விமான சேவை, இந்திய விமானசேவை ஆகியன நேபாளத்துக்கான விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

## பொடா வழக்கு தொடர்பாக ..........................
# வைகோவின் ஆவணங்களை தமிழக அரசு அனுப்ப வேண்டும்
## —— பொடா ஆய்வுக்குழு உத்தரவு



(சென்னை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடந்த 2002ஆம் ஆண்டு மதுரை திருமங்கலம் பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதையடுத்து தமிழக அரசு அவரை பொடா சட்டத்தின்கீழ் கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தது. 19 மாதங்களுக்கு பிறகு வைகோ விடுதலையானார்.

இதை எதிர்த்து தமிழக அரசு முதலில் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தது. கடந்த மாதம் 10ஆம திகதி திடீரென வைகோ மீதான வழக்கை வாபஸ் பெறுவதாக பொடா நீதிமன்றில் தமிழக அரசு மனுத் தாக்கல் செய்தது.

தமிழக அரசின் மனுவை ஏற்று பொடா வழக்கில் இருந்து வைகோ விடுவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பூந்தமல்லி பொடா நீதிமன்று தமிழக அரசின் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

பொடா மறு ஆய்வுக்குழு உத்தரவை ஏற்க இயலாது என்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதனால், வைகோ மீதான பொடா வழக்கு வாபஸ் விவகாரம் மேலும் சிக்கல் ஆகியுள்ளது.

இந்த நிலையில் வைகோ மீதான பொடா வழக்கு குற்றச்சாட்டுகளுக்கான எல்லா ஆதாரங்களையும் தருமாறு தமிழக அரசை பொடா மறு ஆய்வுக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வரும் 10ஆம் திகதி இந்த ஆதாரங்களைத் தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

வைகோ மீது பொடா வழக்கு பதிவு செய்ய என்னென்ன ஆதாரங்கள் உள்ளது என்பதை பொடா மறு ஆய்வுக்குழு மீண்டும் ஒரு தடவை பரிசீலிக்க முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி தமிழக அரசு ஆதாரங்களைச் சமர்ப்பித்ததும் இது தொடர்பான விசாரணையை உடனே பொடாமறு ஆய்வுக்குழு தொடங்கும் என்று தெரிகிறது. உடனடியாக அது முடிவை அறிவிக்கும் என்று டெல்கி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

இதற்கிடையே வரும் செவ்வாய்க்கிழமை நடக்கும் இந்திய மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பொடாவை வாபஸ்பெற அவசர சட்டம் பிறப்பிப்பது குறித்து விவாதிக்கப்படும். அதில் ஒருமித்த முடிவு ஏற்பட்டால் உடனடியாக இந்த அவசர சட்டம் அமுலுக்கு வரும்.

# ஈராக்கின் மொசூல் நகரில் மோதல் எட்டுப் பேர்பலி நாற்பது பேர் காயம்!



ஈராக்கின் மொசூல் நகரில் அமெரிக்கா தலைமையிலான படைகளுக்கும், இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் எட்டுப்பேர் கொல்லப்பட்டதுடன் நாற்பது பேர் படுகாயமடைந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பெண்களும், சிறுவர்களுமெனவும், இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் மேலும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வைத்தியர் ஒருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஹெலிக்கொப்டரில் இருந்த இரண்டு விமானிகள் காயமடைந்ததால் அந்தக் ஹெலி மொசூல் நகருக்கருகில் தரையிறக்க வேண்டி வந்ததாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

வெடிகுண்டுச் சத்தங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் தலபார் பகுதியில் கேட்டவண்ணமிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பாக்தாத் நகரில் ஈராக்கின் இடைக்கால நிர்வாக அரசின் கட்டடத்துக்கு வெளியே மோட்டார் எறிகணை ஏவுகருவிகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வெடிகுண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருக்கையில் ஈராக்கின் இடைக்கால அரச பிரதிநிதிகள் பாக்தாத்தில் கூட்டமொன்றில் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, பஸ்ரா நகரில் எண்ணை விநியோகக் குழாய்கள் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்குட்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் காரணமாக எண்ணை விநியோகம் தடைப்பட்டுள்ளதா என்ற விபரம் தெரியவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நல்லைக் கந்தன் 15 ஆம் நாள் திருவீதியுலாக் காட்சி

## இருபாலையில் கோர...

தலையின் மீது மினிபஸ்ஸின் சக்கரம் ஏறியதால் வயோதிபர் தலை சிதறிப் பலியானார்.

விபத்து நிகழ்ந்தவுடன் குறித்த மினிபஸ்ஸைச் செலுத்திய சாரதி தப்பியோடியதைத் தொடர்ந்து கோபமடைந்த மக்கள் மினிபஸ்சின் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர்.

எனினும் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுத்து நிறுத்தியதுடன் மக்கள் கூட்டத்தையும் கலைத்தனர்.

குறிப்பிட்ட மினிபஸ் சாரதியை கைதுசெய்த கோப்பாய்ப் பொலிஸார் மினிபஸ்ஸையும் தடுத்து வைத்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நீதிபதிகள் எவரும் வருகைதராத போதும் மேலும் அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகப் பொலிஸாரால் சடலத்தினை யாழ். போதனாவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகிறது.

கைது செய்யப்பட்ட மினிபஸ் சாரதி இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

## புலிகளை பேச்சுக்கு...

அபிவிருத்தித் திட்டங்கள் நாடெங்கும் ஆரம்பிக்கப்படும்.

கடந்த இரண்டு வருட காலத்தில் கவனிக்கப்படாதிருந்த அபிவிருத்தி முயற்சிகள் சுகாதாரம், கல்வி, மின்விநியோகம், நீர்ப்பாசனம், விவசாயம், நெடுஞ்சாலை ஆகிய பல்வேறு துறைகளில் திட்டங்களை ஆரம்பித்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றுகையில் -

மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் தேர்தல் முறையையும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையையும் மாற்றியமைப்பதற்கான காலம் வந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

அமைச்சர்களான அநுர பண்டார நாயக்க, தினேஷ் குணவர்த்தன, சுசில் பிறேம் ஜெயந்த, பேரியல் அஷ்ரப் ஆகியோரும் உரையாற்றினர்.

## புலிகளின் பயணத்துக்கு...

பீடத்துடன் கலந்தாலோசனை செய்வதற்காக கேணல் ரமேஷ் தலைமையிலான புலிகள் குழு நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வந்தது.

இந்தக் குழுவினர் நேற்று மீளவும் மட்டக்களப்புக்குத் திரும்பிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர். இவர்களின் போக்குவரத்துக்கு ஹெலிகொப்டர் வழங்கி உதவுமாறு கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகம் ... விமானப் படைத் தரப்பிடம் கோரியிருந்தது. ... அவர்களின் பயணத்துக்கு ஹெலிகொப்டர் சேவை வழங்குவது அவசியமில்லையென அரச தரப்பிலிருந்து பதில் அனுப்பப்பட்டதால் கேணல் ரமேஷ் தலைமையிலான குழுவினர் நேற்று மட்டக்களப்புக்குத் திரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

இலங்கை விமானப் படைத்தரப்பில் புலிகளின் போக்குவரத்துக்கு ஹெலி வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு ...

## பொதுமக்கள் வன்முறையில் ஈடுபடுவதால்

# விபத்துகளில் பாதிக்கப் படுவோருக்கு நீதி வழங்குவதில் தடையேற்படுகிறது!

## மேலதிக நீதிவான் தெரிவிப்பு

வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்ற சம்பவங்களில், பொதுமக்களால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைச் சம்பவங்கள் - பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதில் பாரிய தடையாக இருப்பதாக, யாழ் மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக 'நமது ஈழநாடு'வுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் -

அண்மையில் சில காலங்களாக வீதி விபத்துக்களில் ஒருவர் இறந்தால் ஒன்றுகூடும் பொதுமக்கள் குறிப்பிட்ட வாகனத்தை எரிப்பதையோ அல்லது வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதையோ காணக்கூடியதாகவுள்ளது.

உண்மையில் இத்தகைய வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கமுடியாதுள்ளது. குறிப்பிட்ட விபத்தின் தடயங்கள் யாவும் வன்முறைச் செயல்களாலோ எதிர்ப்பு மற்றும் கோப உணர்வுகளாலோ இல்லாதொழிக்கப்படுவதால் உண்மையான குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடுகின்றனர்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் நிதானத்துடன் செயற்பட வேண்டும். கடந்த வருடம் மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற விபத்திற்கூட இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றமையால் தடயங்கள் யாவும் அழிக்கப்பட்டன. இவை சரியான தீர்ப்புக்களை வழங்குவதற்குத் தடையாக அமைகின்றன.

எனவே, பொதுமக்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் நிதானத்தையும் பொறுமையையும் காக்க வேண்டும் நீதிபதி ஒருவர் வந்து விசாரணைகளை மேற்கொள்ளும் வரை விப்த்துக்குக் காரணமான வாகனத்தை எரிக்கவோ அல்லது தாக்கவோகூடாது.

உண்மையில் இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுவதால் இறந்தவரின் குடும்பம் பாதிக்கப்படுவதுடன் குற்றவாளி தப்பிக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

## சமாதான முயற்சி...

கருதுவர்.

நான் ஜே.வி.பி பற்றி ஏதும் கூற விரும்பவில்லை அவர்களது நிலைப்பாடு வேறுபட்டது இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசும் பொறுப்பை ஜனாதிபதியிடம் வழங்குவோம் அவருக்கு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆணை கிடைத்தது.

எனவே, இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குமான பொறுப்புக்களை ஜனாதிபதியிடம் விட்டுள்ளோம்.

எமக்கு முன்னே ஜே.வி.பி செல்வதாகவும் பல ஏற்பாடுகளைச் செய்வதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பாக நாம் ஏதும் கவலைப்படத் தேவையில்லை தமது கட்சிநடவடிக்கைகளை முன்னெடுக்க அவர்களுக்கு உரிமை உண்டு என தெரிவித்தார்.

## இந்திய...

இவர் நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்குடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டார்.

அத்துடன், மிலிந்த மொறகொட இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும், முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலருமான ஜே. என்டிக்சிற்றுடனும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் தற்போதைய நிலைமைகள் மற்றும் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்பன குறித்துப் பேசசு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது, சமாதான முயற்சிகளில் இந்தியத் தலையீட்டை மொறகொட கோரியதாகவும் கூறப்படுகிறது.

புதிதாக தெரிவான இந்திய அரசுத் தலைவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சு நடத்துவதற்கு இந்தியா செல்லவுள்ளார்.

## பேனாவடிவ துப்பாக்கியை வைத்திருந்த நபர் கைது!

(கொழும்பு)

குமிழ்முனைப் பேனாவைப் போன்ற நவீனரக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸார் நேற்று கைதுசெய்தனர்.

கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த நவீன ரகத் துப்பாக்கிக்கு பயன்படுத்தக்கூடிய ரவைகளையும் அவரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி றுவான் வெதசிங்க தெரிவித்தார்.

காட்டுப் பகுதியில் போரிடும் இராணுவத்தினர் பயன்படுத்தும் மிகப்பெறுமதி வாய்ந்த துப்பாக்கி இது என இனம் காணப்பட்டது.

இதேபோன்ற ஒரு துப்பாக்கியை இதற்கு முன்னரும் கைப்பற்றியிருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## தமிழின உயிர்க் கொலை நாள் மட்டக்களப்பில் இன்று அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று தமிழின உயிர்க்கொலை தினமாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மட்டக்களப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இன்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடியும் கல்விநிலையங்களைப் பூட்டியும் வாகனப் போக்குவரத்துச் சேவையை இடை நிறுத்தியும்,

வீடுகள் பொது இடங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்டும் இன்றைய துக்கதினத்தை நினைவுகூருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு செப்ரம்பர் 5ஆம் திகதி வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களில் 158 பேர் படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலை சத்துருக்கொண்டான், புல்லுமலை மைலந்தனை, புதுக்குடியிருப்பு சித்தாண்டி போன்ற பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த தமிழர்களின் படுகொலையையும் நினைவுகூரும் வகையிலேயே இன்றைய நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
நாளை முதல்
Eco - உதயன்
B.stat. - தவசேகர்
Acc - D.sam
Log. - மோகன்

# புலிகளின் பயணத்துக்கு...

பீடத்துடன் கலந்தாலோசனை செய்வதற்காக கேணல் ரமேஷ் தலைமையிலான புலிகள் குழு நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வந்தது.

இந்தக் குழுவினர் நேற்று மீளவும் மட்டக்களப்புக்குத் திரும்பிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர். இவர்களின் போக்குவரத்துக்கு ஹெலிகொப்டர் வழங்கி உதவுமாறு கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகம், அரசாங்க சமாதான செயலகத்தினூடாக கேட்டிருந்தது.

ஆயினும், விடுதலைப் புலிகளின் தளபதிகளது போக்குவரத்துக்கு ஹெலிகொப்டர் சேவை வழங்குவது அவசியமில்லையென அரச தரப்பிலிருந்து பதில் அனுப்பப்பட்டதால் கேணல் ரமேஷ் தலைமையிலான குழுவினர் நேற்று மட்டக்களப்புக்குத் திரும்பவில்லை எனத் தெரியவருகிறது.

இலங்கை விமானப் படைத்தரப்பில் புலிகளின் போக்குவரத்துக்கு ஹெலி வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாலேயே இந்த வசதி வழங்கப்படவில்லையென விமானப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டிய செய்திகள் தெரிவித்தன.

தான முயற்சிகளில் தற்போதைய நிலைமைகள் மற்றும் ஐ.தே.கவின் நிலைப்பாடு என்பன குறித்துப் பேசசு நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின்போது, சமாதான முயற்சிகளில் இந்தியத் தலையீட்டை மொறகொட கோரியதாகவும் கூறப்படுகிறது.

புதிதாக தெரிவான இந்திய அரசுத் தலைவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சு நடத்துவதற்கு இந்தியா செல்லவுள்ளார்.

இதற்கு முன்னோடியாகவே மிலிந்த மொறகொட புதுடெல்கிக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.


**A/L DAY CLASS**

வர்த்தகப் பிரிவு — நாளை முதல்

| | | | |
|---|---|---|---|
| Eco | - உதயன் | B.stat. | - தவசேகர் |
| Acc | - D.sam | Log. | - மோகன் |
| B.st. | - பசில் | Eng. | - சுதர்சன் |

(சி-3047)

**DMI யாழ். நகர்**






இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.